தமிழ்நாடு அரசு

# தமிழ்

## நான்காம் வகுப்பு

தீண்டாமை
மனிதநேயமற்ற செயல் – பெருங்குற்றம்

## பள்ளிக் கல்வித்துறை

தமிழ்நாடு அரசு
இலவசப் பாடநூல் வழங்கும்
திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது
(விற்பனைக்கு அன்று)

© தமிழ்நாடு அரசு
முதல் பதிப்பு : தி.பி. 2042;( 2011)
( சமச்சீர்க் கல்வி – பொதுப் பாடத்திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட நூல் )

## பாடநூல் குழு

### குழுத்தலைவர்

முனைவர். சி. கதிர்வேல், மேனாள் முதல்வர்,மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம்,கிருஷ்ணகிரி – 635 001.

### மேலாய்வாளர்கள்

புலவர். வே.பதுமனார்,மேனாள் முதுகலைத் தமிழாசிரியர்,திருவள்ளுவர் மேனிலைப் பள்ளி, குடியேற்றம் – 632 602,வேலூர்.

செ. இராஜா, விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம்,திருமூர்த்தி நகர் – 642 112, திருப்பூர் .

### நூலாசிரியர்கள்

அ. கருப்பையா, தலைமை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,பூவரசகுடி– 622 301, புதுக்கோட்டை.

முனைவர்.அ.கிருஷ்ணமூர்த்தி, பட்டதாரி ஆசிரியர் , நாடார் மகமை மேனிலைப்பள்ளி, ஏழாயிரம் பண்ணை , விருதுநகர்.

ந. முத்து, தலைமை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, கண்ணுக்காரன் பட்டி, பாலக்கோடு ஒன்றியம், தருமபுரி.

சீ. திருமுருகன், இடைநிலை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, தாண்டாம்பாளையம் – 638 314, ஈரோடு .

புலவர். செ. சிவநேசன், மேனாள் தலைமை ஆசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி,தெ. நெடுஞ்சேரி, கடலூர் .

பா. ச. குப்பன், இடைநிலை ஆசிரியர், வள்ளுவர் நடுநிலைப்பள்ளி, திருநாகேச்சரம், குன்றத்தூர் – 600 069, காஞ்சிபுரம்.

---

கணினி அச்சு,வடிவமைப்பு: த·ரகு , மு . விஜயசாரதி ஓவியம், அட்டை வடிவமைப்பு: அரஸ்

---

நூல் அச்சாக்கம்

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்,
கல்லூரிச் சாலை, சென்னை – 600 006.

---

**விலை : ரூ.**

இந்நூல் 80 ஜி. எஸ். எம். மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

ஆப்செட் முறையில் அச்சிட்டோர் :

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம் வியந்து
செயல் மறந்து வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே!

– 'மனோன்மணியம்' பெ. சுந்தரனார்.

## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் – பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

## உறுதிமொழி

'இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறப்புகள். எனது நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் நான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.'

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத் தாகூர்

## நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒரிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே! உனக்கு
வெற்றி! வெற்றி! வெற்றி!

| வ.எண் | பாடத் தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | மெய் சொல்லல் நல்லது (பாடல்) | 1 |
| 2. | இயற்கை (படம்) | 3 |
| 3. | கொடிக்குக் காய் பாரமா ? | 6 |
| 4. | வழங்கும் தமிழ் | 10 |
| 5. | மடல் எழுதுவோம் | 14 |
| 6. | ஒரு கார்காலப் பொழுது | 17 |
| 7. | தமிழன் இதயம் (பாடல்) | 22 |
| 8. | பொம்மை உலகம் | 24 |
| 9. | ஒளிமயமான எதிர்காலம் | 30 |
| 10. | அறிவு வந்தது | 35 |
| 11. | மரபு அறிவோம் | 41 |
| 12. | வருது . . . வருது . . . ரோபோ வருது ! | 46 |
| 13. | இறகும் இலையும் ஒன்றடி | 50 |
| 14. | நீண்ட வழி போக வேண்டுமம்மா ! (பாடல்) | 55 |
| 15. | படித்தால் தெரியும் | 58 |
| 16. | மேகமும் மணற்குன்றும் | 62 |
| 17. | அணையா விளக்கு | 67 |
| 18. | செம்மொழி – பண்பாட்டு மொழி | 73 |
| 19. | படமும் பாடமும் (பட அகராதி) | 76 |
| 20. | செய்யுட் பகுதி<br>(அ) திருக்குறள் (ஆ) மூதுரை<br>(இ) நறுந்தொகை (ஈ) தாலாட்டு | 80 |
| 21. | அகர முதலி | 89 |

மனப்பாடப்பகுதி

திருக்குறள், மூதுரை, நறுந்தொகை – (முழுவதும்)

# 1. மெய் சொல்லல் நல்லது



மெய் சொல்லல் நல்லதப்பா – தம்பி
மெய் சொல்லல் நல்லதப்பா..... !

கண்டதைச் சொல்லென்று சொன்னாலும் – நீ
உண்டதைச் சொல்லென்று சொன்னாலும்
மண்டை உடைத்திட வந்தாலும் – பொருள்
கொண்டு வந்துன்னிடம் தந்தாலும்

மெய் சொல்லல் நல்லதப்பா – தம்பி
மெய் சொல்லல் நல்லதப்பா..... !

பின்னவன் கெஞ்சியும் நின்றாலும் – அன்றி
முன்னவன் அஞ்சிட நின்றாலும்
மன்னவரே எதிர் நின்றாலும் – புலி
தின்னவரேன் என்று சொன்னாலும் – நீ

மெய் சொல்லல் நல்லதப்பா – தம்பி
மெய் சொல்லல் நல்லதப்பா..... !

–பாவேந்தர் பாரதிதாசன்

| | | |
|---|---|---|
| பெயர் | : | பாவேந்தர் பாரதிதாசன். |
| இயற்பெயர் | : | சுப்புரத்தினம். |
| ஊர் | : | புதுச்சேரி. |
| பெற்றோர் | : | கனகசபை - இலட்சுமி. |
| காலம் | : | 29 . 04. 1891 - 21. 04 . 1964. |
| இயற்றிய நூல்கள் | : | சஞ்சீவி பர்வதத்தின் சாரல், இசையமுது, அழகின் சிரிப்பு, பாண்டியன் பரிசு, இருண்டவீடு,குடும்பவிளக்கு முதலியன. |

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

1. அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக:

மெய் ____________ அஞ்சி ____________

மன்னவர் ____________ பொருள் ____________

2. பிரித்து எழுதுக:

நல்லதப்பா ____________

சொல்லென்று ____________

வந்துன்னிடம் ____________

3. எதிர்ச்சொல் எழுதுக:

மெய் × ____________ . அஞ்சி × ____________ .

4. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை தருக:

உண்மை சொல்லவேண்டிய சூழல்களாகப் பாவேந்தர் பாரதிதாசன் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

5. முதல் எழுத்தை மாற்றி வேறு வேறு சொற்களை எழுதுக:

(எ.கா.) நாடு சொல்

| | | | |
|---|---|---|---|
| ____________ | | ____________ | |
| ____________ | டு | ____________ | ல் |
| ____________ | | ____________ | |

6. இப்பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் உள்ள சொற்களை எடுத்து எழுதுக:

(எ.கா.) கண்டதை ____________ ____________

உண்டதை ____________ ____________

7. 'அரசன்' என்னும் பொருள்தரும் வேறு மூன்று சொற்களை எழுதுக:

(எ.கா.) கோ ____________ ____________ ____________

# 2. இயற்கை



## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

**1. படத்தை உற்றுக் கவனித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க:**

1. படத்தில் காணப்படும் பறவைகளின் பெயர்களை எழுதுக.
2. ஆற்றங்கரை ஓரத்தில் காணப்படும் விலங்குகளின் பெயர்களை எழுதுக.
3. வண்ணத்துப் பூச்சிகள் என்ன செய்கின்றன ?
4. மீன்கொத்தி எதற்காகக் காத்திருக்கிறது ?

**2. படத்தில் உள்ள விலங்குகளில் ‘ம’ வரிசையில் அமையும் உயிரிகளின் பெயர்களை எழுதுக.**

3. படத்தில் உள்ள விலங்குகள் செய்யும் செயல்களை எழுதுக.
(எ.கா.) மான் நீர் குடிக்க வருகிறது.

4. படத்தில் பல்வேறு பறவைகள், விலங்குகள் உள்ளன. இவற்றைத் தவிர வேறு ஐந்து விலங்குகளின் பெயர்களை எழுதுக.

5. நீரில் வாழும் ஐந்து உயிரிகளின் பெயர்களை எழுதுக.

6. நீர்நிலைகளின் பெயர்களை அறிந்து எழுதுக.
(எ.கா.) குளம்

7. ஆற்றங்கரையில் மரம், செடி, கொடிகள் நிறைந்து காணப்படுகின்றன. உனக்குத் தெரிந்த மரங்கள் எவையேனும் ஐந்து எழுதுக.

8. உன் ஊருக்கு அருகில் உள்ள ஆறுகளின் பெயர்களை எழுதுக.

**9. விலங்குகளையும் அவற்றின் உணவுகளையும் பொருத்துக.**

| | | |
|---|---|---|
| அணில் | – | பூந்தேன் |
| மான் | – | மீன் |
| வண்ணத்துப்பூச்சி | – | பழங்கள், விதைகள் |
| மீன்கொத்தி | – | எலி, பாம்பு, பூரான் |
| கீரிப்பிள்ளை | – | புல், இலை, தழை |

**10. எடுத்துக்காட்டில் உள்ளது போல மற்ற விலங்குகளை வருணித்து எழுதுக.**

(எ.கா.)



முயல் வெண்மை நிறத்தில் இருக்கும். குதித்துக் குதித்து ஓடும். அதன் இரண்டு காதுகளும் கொய்யா இலை போன்று இருக்கும்.



______________________________

______________________________

______________________________



______________________________

______________________________

______________________________

## செயல் திட்டம்

செய்தித்தாள்கள், சிறுவர் இதழ்களில் வரும் படங்களைச் சேகரித்துப் படத்தொகுப்பு அமைக்க. ஒவ்வொரு படத்தைப் பற்றியும் வருணித்து எழுதுக.

### விளையாடலாம் வாங்க !

எவையேனும் பத்து விலங்குகள், பறவைகள், பூக்கள் முதலியவற்றின் பெயர்களைத் தனித்தனியாகத் துண்டுத் தாளில் எழுதிச் சுருட்டிக் கொள்க. மாணவர்கள் வட்டமாக அமர்ந்து ஒவ்வொருவரும் ஒரு தாளை எடுத்துக் கொள்க. தனக்கு வந்த தாளில் உள்ள பொருளைப் பற்றி வருணித்து மூன்று தொடர்கள் பேசுக.


## 3. கொடிக்குக் காய் பாரமா ?

வேங்கை நாடு ஓர் அழகிய சிறுநாடு. அந்நாட்டை வேங்கை மார்பன் என்னும் மன்னர் ஆண்டு வந்தார். அவர் வயதில் இளையவர். 'இளைஞர்களால்தான் நாடு முன்னேறும்; வயதானவர்கள் இந்த நாட்டுக்குத் தேவையில்லை' என்று நினைத்தார்.

மன்னர், தலைமை அமைச்சரை அழைத்து, ''வயதானவர்களால் நாட்டுக்கு ஒன்றும் பயனில்லை. அவர்களால் எப்பொழுதும் தொல்லைதான் . . . . . அவர்களை என்ன செய்யலாம் ?'' என்று கேட்டார்.

தலைமை அமைச்சருக்கு ஒரே வியப்பு! 'வயதானவர்களால் பயன் ஒன்றும் இல்லையா ? அவர்கள் வீட்டிற்கும் நாட்டிற்கும் சுமையா ? கொடிக்குக் காய் பாரமாகுமா ?' என்று நினைத்தார். ஆனால், அரசனின் ஆணை அல்லவா! அதனால் அவர், 'வயதானவர்களை நாடு கடத்திவிடலாம்' என்றார். 'அப்படியே செய்யுங்கள்' என்று மன்னரும் ஆணையிட்டார்.

நாடெங்கும் ஒரே பரபரப்பு. அரசரின் ஆணை நாடெங்கும் முரசறைந்து அறிவிக்கப்பட்டது. எல்லாக் குடும்பத்தினரும் மிக்க வருத்தத்தோடு வயதானவர்களை எல்லாம் அண்டை நாடுகளுக்கு அனுப்பிவிட்டார்கள். ஆனால், மதிவாணன் என்னும் இளைஞன், தன் வயதான தந்தையின்மீது கொண்ட அன்பால் அவ்வாறு செய்யவில்லை. தன் வீட்டிலேயே ஒரு மறைவான இடத்தில் வைத்துப் பாதுகாத்து வந்தான்.



ஒருநாள், வேங்கை நாட்டு அரசவைக்கு விருந்தினராக ஓர் அறிஞர் வந்தார். அவர் பெயர் செழியன். வேங்கைமார்பன் அவரை அன்புடன் வரவேற்றார்; அவையில் அமர வைத்தார். அறிஞர் செழியன் அவையினரைப் பார்த்து, ''இந்நாட்டில் நான் சொல்வது போல் செய்யக்கூடிய ஆற்றல் உள்ளவர் எவரேனும் உண்டா ?'' என்று வினா எழுப்பினார். மன்னரும் அவையினரும், ''என்ன செயல் அது ?'' என்று வினவினர்.

“சாம்பலைக் கயிறாகத் திரிக்க வேண்டும்; வெண்சங்கில் நூலைக் கோத்துத் தரவேண்டும் – செய்யமுடியுமா ?” என்று கேட்டு ஏளனமாகச் சிரித்தார் செழியன். “சாம்பலைக் கயிறாகத் திரிப்பதா! என்ன கோமாளித்தனம்!” என்றார் மன்னர். அவையினரோ, “இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது.” என்றனர்.

அவையினரை நோக்கி, “யாரேனும் இச்செயலைச் செய்து காட்ட முடியுமா ?” என்று அரசர் வினவினார். எல்லாரும் அமைதியாக இருந்துவிட்டனர்.

மன்னர், புதிதாக வந்த அறிஞரிடம், “இரண்டு நாள்கள் பொறுங்கள்; நீங்கள் சொன்னதைச் செய்து காட்டுவோம்” என்றார். அவை கலைந்தது.

மறுநாள் முரசறைந்து, பொதுமக்களுக்கு இச்செய்தி தெரிவிக்கப்பட்டது. அறிஞர் கூறிய செயல்களைச் செய்பவருக்கு ஆயிரம் பொற்காசுகள் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

மதிவாணன், தன் தந்தையிடம் இதைக் கூறினான். தந்தையோ, “இவ்வளவுதானே ! நான் சொல்லுகிறபடி செய்து, அதை அரண்மனைக்கு எடுத்துச் செல்” என்றார். மதிவாணன் அரசவை சென்றான்.

ஒரு தட்டில் சாம்பலால் ஆன கயிறை வைத்து அரசவையில் காட்டினான். சங்கில் நூலைக் கோத்தும் வைத்திருந்தான். எல்லாரும் கைத்தட்டி ஆரவாரம் செய்தனர். “ஆகா ! எப்படி ! எப்படி ! ” என்று அனைவரும் வியந்தனர்.

மன்னர், ஆயிரம் பொற்காசுகளைத் தட்டில் வைத்து மதிவாணனுக்குப் பரிசாக அளித்தார். மன்னர் மதிவாணனைப் பார்த்து, “இதை எப்படிச் செய்தாய் ?” என்று வினவினார்.

இளைஞன் மன்னனை நோக்கி, “அரசே! அஃது எளிது. ஒரு கயிறைத் துண்டு துண்டாக வெட்டினேன்; ஒரு துண்டைத் தட்டில் வைத்தேன்; அதைத் தீ வைத்துக் கொளுத்தினேன்; அது பற்றி எரிந்தது; தீ அணைந்தபின் சாம்பல் கயிறு போலக் காட்சியளித்தது. அதனைக் கலையாமல் கொண்டுவந்து காட்டினேன்” என்றான். “அதுசரி. சங்கில் நூல் எவ்வாறு ஒருபக்கம் இருந்து மறுபக்கம் சென்றது ?” என்று மன்னர் வினவினார்.

“ஒரு கட்டெறும்பில் மெல்லிய நூலைக் கட்டினேன். சங்கின் எதிர்ப்புறத்தில் கற்கண்டுத் துண்டு ஒன்றை வைத்தேன். எறும்பு தானாகச் சங்கினுள் நுழைந்து,கற்கண்டை நோக்கி எதிர்ப்புறம் வந்துவிட்டது.எறும்பை விட்டுவிட்டேன்;

நூலைக் கோத்துவிட்டேன்" என்றான் மதிவாணன். "நன்று! நன்று! ஆனால், இந்தச் செயலை நீயாகச் செய்தாயா? வேறு யாரேனும் உனக்குச் சொல்லிக் கொடுத்தார்களா?" என்றார் மன்னர்.

மதிவாணன் சிறிது நேரம் அமைதியாக நின்றான். பிறகு, "அரசே! தங்கள் ஆணையை மீறிவிட்டதற்குப் பொறுத்தருள வேண்டும். நான், வயதான என் தந்தையை யாருக்கும் தெரியாமல் வீட்டிலேயே வைத்துப் பாதுகாத்து வருகிறேன். அவர்தான் இந்தச் செயலைச் செய்ய எனக்கு வழிகாட்டினார்." என்றான்.

மன்னர்க்குத் தெளிவு ஏற்பட்டது. வயதான முதியவர்களால் நாட்டுக்குக் கேடு ஒன்றும் இல்லை. ஒருநாடு முன்னேற வேண்டுமானால், இளைஞர்களின் செயல்வேகமும் , வயதானவர்களின் பட்டறிவும், அவர்தம் வழிகாட்டலும் தேவை என்பதை உணர்ந்தார். வயதானவர்கள் அனைவரும் நாடு திரும்ப மன்னர் ஆணை பிறப்பித்தார். மக்கள் மகிழ்ந்தனர்.

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

### 1. அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.

ஆணை ____________________ அறிஞர் ____________________

ஏளனம் ____________________ கேடு ____________________

பாரம் ____________________

### 2. பிரித்து எழுதுக.

வயதானவர் ____________________

அரசாணை ____________________

முரசறைந்து ____________________

அரசவை ____________________

காட்சியளித்தது ____________________

### 3. சேர்த்தெழுதுக.

பயன் + இல்லை ____________________

பொன் + காசு ____________________

கல் + கண்டு ____________________

பொறுத்து + அருள ____________________

## 4. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. அமைச்சர் வயதானவர்களை ________________ கடத்திவிடலாம் என்றார்.
2. அரசவைக்கு வந்த அறிஞரின் பெயர் ________________ .
3. சாம்பலைக் ________________________________________ திரிக்க வேண்டும்.
4. எறும்பு சங்கின் எதிர்ப்புறம் வர ________________ துண்டு வைக்கப்பட்டது.
5. நாடு முன்னேற வயதானவர்களின் ________________________________ அவர்தம் ________________________________________ தேவை.

## 5. விடையளிக்க.

1. வேங்கை நாட்டை ஆண்டுவந்த மன்னர் யார் ?
2. அரசரின் ஆணை யாது ?
3. மதிவாணன் தன் தந்தையை எங்கே மறைத்து வைத்தான் ?
4. அறிஞர் கூறிய செயலைச் செய்பவர்க்கு மன்னர் அறிவித்த பரிசு யாது ?
5. மதிவாணன், ‘என்னைப் பொறுத்தருள வேண்டும்’ என்று ஏன் கூறினான் ?

## 6. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை தருக.

1. வெளிநாட்டிலிருந்து வந்த அறிஞர் கூறிய செயல்கள் யாவை ?
2. சங்கின் எதிர்ப்புறத்தில் கட்டெறும்பு வந்தது எப்படி ?
3. சாம்பலில் கயிறு செய்தது எப்படி ?

## தெரிந்துகொள்வோம்

### திணை

‘திணை’ என்னும் சொல்லுக்கு ‘ஒழுக்கம்’ என்பது பொருள். ஒழுக்கமுடைய மனிதர்களை உயர்திணை என்றும் உயர்திணை அல்லாதவற்றை அஃறிணை(அல்+திணை) என்றும் தமிழ் இலக்கணம் பாகுபடுத்தும்.

உயர்திணை – மன்னன், மக்கள்.
அஃறிணை – குரங்கு, யானை, கடல், மலை.

**விடையளிக்க.**

1. திணை எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
2. பின்வரும் சொற்களை வகைப்படுத்துக.

அரசன், மரம், பொன்னன், தாமரை, கல், கண்ணகி, கால்,வேலன், சங்கு, ஆசிரியர், கரிகாலன், புறா, மருத்துவர்.

| உயர்திணை | அஃறிணை |
|---|---|

# 4. வழங்கும் தமிழ்



சென்னை வானொலி நிலையத்தில் உள்ள ஒலிப்பதிவு அரங்கிலிருந்து தமிழ்ச்செல்வி வெளியே வந்தாள். வெளியில் காத்திருந்த அவளுடைய பெற்றோர் மகிழ்ச்சியோடு அவளை அணைத்துக் கொண்டனர். 'நன்றாகப் பாடினாய் செல்வி' என பாராட்டினார் தந்தை. தமிழ்ச்செல்வியின் அம்மா அவளைப் பார்த்துப் பூரித்து நின்றாள்.பின்னர் மூவரும் எதிரில் உள்ள மெரினா கடற்கரைக்குச் சென்றார்கள்.

'நொச்சிக்குப்பம்'என்னும் பெயர்ப்பலகை அவர்களை வரவேற்றது. அது ஒரு மீனவர் குப்பம். அங்கே சிறுசிறு குடிசைகள். ஊடே சில்லென்ற கடற்காற்று. இப்படி எளிமையாகக் காட்சியளித்தது அந்தக் குப்பம்.

அங்கு வாழும் மீனவர்கள் அதிகாலையிலேயே எழுந்து கடலில் மீன்பிடிக்கச் சென்றுவிடுவர். கட்டுமரங்களும் விசைப்படகுகளும் வலைகளுமே அவர்களுடைய வாழ்க்கைக்குப் பெருந்துணை. அவர்களின் குடிசை எதிரே வங்கக் கடல். அதில் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை தண்ணீர்! தண்ணீர்!.

அவர்கள் பேசுகின்ற மொழியும் பிறமொழி கலவாத தூய தமிழாக இருக்கிறது. சோறு, குழம்பு, சாறு, மாவுச்சோறு, தட்டம், பானை, அகப்பை, அரிவாள்மணை, சுள்ளி, திரி, மிளகுத் தண்ணீர், வலை, படகு, கட்டுமரம், துடுப்பு, காய்ச்சல், கக்கல், கழிச்சல், மருத்துவச்சி, இராப்பொழுது, கூவுதல், சாயுங்காலம், ஆய்தல், மிளிர்வை, தடி போன்ற சொற்களெல்லாம் தூய தமிழ்ச் சொற்களாகவே இன்றும் அவர்களின் வாய்மொழியாய் உயிர்ப்போடு வாழ்ந்து வருகின்றன.



அவர்களின் குழந்தைகள் பாண்டி, கோலி, கில்லி, சடுகுடு ஆகிய எளிய விளையாட்டுகளை ஆர்வமுடன் விளையாடுகின்றனர். கிளிஞ்சல்களை வைத்துப் 'பல்லாங்குழி' என்னும் தமிழர்களின் பண்டைய ஆட்டத்தையும் ஆடுகின்றனர். சிறுசிறு சங்குகளால் ஆன மாலைகளைக் கழுத்தில் விருப்பத்துடன் அணிந்திருக்கின்றனர். மீனவர்கள் கடலில் பிடித்து வந்த மீன்களை மீனவப் பெண்கள் கூறு கட்டி விற்கின்றனர்.

மீனவ மக்களுக்கு எப்போதுதான் ஓய்வு? கடல் கொந்தளிக்கும் நாள்களிலும் விடாது மழை பெய்யும் நாள்களிலும் அவர்கள் வீட்டில் ஓய்வெடுத்துக் கொள்கின்றனர். அப்போதும் மீன்பிடி வலைகளையும் கட்டுமரங்களையும் செப்பம் செய்கின்றனர். குடிசைகளில் வயது முதிர்ந்த பெரியவர்கள் மாலை வேளைகளில் தங்கள் பேரக் குழந்தைகளுக்கு இனிய கதைகள் சொல்லுவார்கள்.

ஆடிப்பூராடத்தன்று முழுநிலா நாளில் கடற்கன்னிக்குப் பொங்கலிடுவார்கள். அன்று முழுவதும் ஆணும் பெண்ணும் ஒரு சொட்டு நீர் கூட அருந்தாமல் நோன்பு இருப்பார்கள். மாலையில் நிறைமதி கண்டபின் பொங்கலைப் படையலிடுவார்கள். தை முதல் நாள் கொண்டாடப்படும் பொங்கல் திருநாள் அவர்களின் பெரிய திருவிழா ஆகும். 'காணும் பொங்கல்' அவர்களின் கரும்புத் திருவிழா ஆகும்.

ஆவணித் திங்கள் கடைசி ஞாயிற்றுக்கிழமை அன்று எல்லையம்மன் திருக்கோயிலில் குலதெய்வங்களுக்கும் சேர்த்து விழா நடத்துவார்கள். விழாவின்போது சிலம்பாட்டம், புலியாட்டம் போன்ற நாட்டுப்புற வீர விளையாட்டுகளோடு குடும்பத்துக்கு ஒருவராகப் பால்குடம் சுமந்து கரகம் எடுப்பார்கள்.

அவர்களின் குடிசைகளுக்கு அருகில் கம்பீரமாய் நிற்கிறது கலங்கரை விளக்கம். அதிலிருந்து வெளிவரும் ஒளி, தொலைவிலிருந்து வரும் கப்பல்கள் கரைசேர வழி காட்டுகிறது. மொழித் தூய்மையும் இன ஒற்றுமையும் கொண்டு, ஒருங்கே வாழும் மீனவர் குப்பங்கள் தனித்தமிழ் வழங்கும் குப்பங்களாகவே என்றும் இருக்கின்றன. மீனவர்களின் தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும், கடுமையான உழைப்பும், அனைவருக்கும் கலங்கரை விளக்கம் போல வழிகாட்டுகின்றன.



மீனவர்களின் தூய தமிழ்ப் பேச்சை அறிந்து கொண்டதுடன், அவர்களின் பழக்க வழக்கங்கள் வழிபாட்டு முறைகள் ஆகிய அனைத்தையும் தமிழ்ச்செல்வியும் அவளுடைய பெற்றோரும் கண்டு, கேட்டு, வியந்து நின்றனர். 'மீண்டும் ஒருமுறை வருவோம்' என்று தந்தை கூற அனைவரும் வீடு திரும்பினர்.

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

### 1. அகராதியைப் பார்த்துப் பொருள் எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| பூரித்து | ____________ | குப்பம் | ____________ |
| தட்டம் | ____________ | சுள்ளி | ____________ |
| மிளிர்வை | ____________ | நோன்பு | ____________ |

### 2. பிரித்து எழுதுக.

கடற்கரை ______________________

பெருந்துணை ______________________

கலங்கரை ______________________

பழங்காலம் ______________________

எல்லையம்மன் ______________________

### 3. கோடிட்ட இடத்தை நிறைவு செய்க.

1. மெரினா கடற்கரை அருகில் உள்ள மீனவர் குப்பத்தின் பெயர்__________.
2. கப்பல்கள் கரைசேரக் ______________________ வழிகாட்டுகின்றது.
3. காணும் பொங்கல்தான் மீனவர்களின் ______________ திருவிழாவாகும்.

### 4. விடையளிக்க.

1. மீனவர் வாழ்க்கைக்குப் பெருந்துணையாக அமைந்தவை எவை?
2. குப்பத்துச் சிறுவர்கள் விளையாடும் விளையாட்டுகள் யாவை?

### 5. ஆறுவரிகளுக்கு மிகாமல் விடை தருக.

1. மீனவ மக்கள் பேசும் தூய தமிழ்ச் சொற்கள் யாவை?
2. ஆடிப்பூராடத்தன்று மீனவ மக்கள் கொண்டாடும் விழாவை விவரி.

6. பிறமொழி கலவாத தமிழ்ச் சொற்கள் பத்து எழுதுக.

______________________________

______________________________

______________________________

7. சொற்றொடர் அமைக்க.

(எ.கா.) கடற்கரை – மெரினா கடற்கரையைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும்.

பாதுகாப்பாக ______________________________

நோன்பு ______________________________

ஒற்றுமை ______________________________

8. குழந்தைகள் விளையாடும் விளையாட்டுகளை எழுதுக.

__________ __________ __________ __________

9. தகுந்த சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

புறா தேடுவது ______________________ (இறை / இரை)

கடல் நீரில் எழுவது ______________________ (அழை / அலை)

மல்லிகைப் பூவுக்கு ______________________ உண்டு (மனம் / மணம்).

ஆற்றில் வருவது ______________________ (வெல்லம் / வெள்ளம்).

10. பெட்டிக்குள் உள்ள தொழில் சார்ந்த சொற்களைத் தகுந்த இடத்தில் இட்டுத் தொடரை நிறைவு செய்க.

மீனவர்கள் கடலில் ______________________ செல்கின்றனர்.

உழவர்கள் ______________________ தொழில் செய்கின்றனர்.

மருத்துவர்கள் ______________________ பணி செய்கின்றனர்.

கொத்துவேலை செய்பவர்கள் ____________ கட்டும் தொழில் செய்கின்றனர்.

ஆசிரியர்கள் ______________________ பணி செய்கின்றனர்.

| கற்பித்தல், மீன்பிடிக்க, கட்டடம், உழவு, மருத்துவம் |
|---|

**செயல் திட்டம்**

உங்கள் பகுதியில் நடைபெறும் திருவிழா, பொருட்காட்சி பற்றிப் படத்தொகுப்பு அமைக்க.

# 5. மடல் எழுதுவோம்



வீடெங்கும் விழாக்கோலம். இளங்கோவன் வீட்டுக்குள் நுழைந்தான். அவனுடைய அத்தை, மாமா, சிற்றப்பா, தமக்கை, தங்கை எல்லாரும் அங்கே கூடியிருந்தார்கள்.

இளங்கோவனின் தாய், "நாளை மறுநாள் திருத்தணியில் அக்காள் திருமணத்திற்குச் செல்வதற்காக உனது ஆசிரியரிடம் விடுப்பு வேண்டிப் பெற்று வா" என்றார்.

"வகுப்பாசிரியரிடம் எவ்வாறு விடுப்பு வேண்டிப் பெறுவது ?" என்றான் இளங்கோவன்.

"விடுப்பு மடல் எழுதிப் பெறலாம்" என்றார் தந்தை.

"விடுப்பு மடலா ? எப்படி எழுதுவது ? எனக்குத் தெரியாதே !" என்று தயங்கினான் இளங்கோவன்.

"அதற்கு ஏன் நீ தயங்குகிறாய் ? நான் சொல்லித் தருகிறேன்" என்று தந்தை சொல்லத் தொடங்கினார்.

சிதம்பரம்,
30.08.2011.

கடிதத்தின் வலப் பக்க ஓரத்தில் நம் ஊர்ப் பெயரை எழுது. அதற்குக்கீழ், மடல் எழுதும் நாளைக் குறிப்பிடு.

அனுப்புதல்
அ. இளங்கோவன்,
36,நக்கீரர் தெரு,
சிதம்பரம்–608 001.

பின்னர் இடப்பக்கம் 'அனுப்புதல்'என்று எழுதி உன் பெயரையும் முகவரியையும் ஒன்றன் கீழ் ஒன்றாக எழுது.

பெறுதல்
வகுப்பாசிரியர் அவர்கள்,
நான்காம் வகுப்பு 'அ'பிரிவு,
நகராட்சி நடுநிலைப்பள்ளி,
சிதம்பரம் – 608 001.

அதன் கீழ், 'பெறுதல்' என எழுதி வகுப்பாசியர், பள்ளி முகவரியை எழுது.

மதிப்பிற்குரிய ஐயா / அம்மா,

அதன் கீழ், வகுப்பாசிரியரை விளித்து மதிப்பிற்குரிய ஐயா / அம்மா என்று எழுதவேண்டும்.

பின்னர், விடுப்பிற்கான காரணத்தையும், விடுப்புத் தேவையான நாள்களையும் தேதியுடன் குறித்துத் தெளிவாக எழுதவேண்டும். இதனை மடல் செய்தி என்பர். அதனை இவ்வாறு அமைக்கலாம்.

என்னுடைய தமக்கையின் திருமணம் 31–08–2011 அன்று திருத்தணியில் நடைபெறுவதால், என்னால் பள்ளிக்கு வர இயலாது. எனவே, 30–08–2011, 31–08–2011 ஆகிய இரு நாள்களுக்கும் விடுப்பு அனுமதிக்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

"அப்பா! இதனை அப்படியே அனுப்பிவிடலாமா?" என்றான் இளங்கோவன்.

"இல்லை......இல்லை........ மடலை எழுதியவர் யார் என்று தெரிய வேண்டாவா? கீழே வலப்பக்க மூலையில் 'தங்கள் உண்மையுள்ள' என எழுதி உன் கையொப்பத்தை இட வேண்டும். இதுவே விடுப்பு மடல் அமைக்கும் முறையாகும்" என்றார் தந்தை.

தங்கள் உண்மையுள்ள,
அ. இளங்கோவன்.

இளங்கோவன் பெரிதும் மகிழ்ந்தான். மடலைப் பள்ளிக்கு அனுப்ப விரைந்தான்.

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

**1. அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.**

விளித்து ______________________ மடல் ______________________

**2. பிரித்து எழுதுக.**

வீடெங்கும் __________________ வகுப்பாசிரியர் __________________

கையொப்பம் __________________ இடப்பக்கம் __________________

**3. சொற்களைப் பயன்படுத்தித் தொடர் அமைக்க.**

செய்தி, பணிவுடன், கையொப்பம்

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

**4. சரியா (✓) தவறா (×) – குறியிடுக.**

1. பள்ளிக்குக் காலம் தாழ்த்தி வருதல். ☐
2. அதிகாலைத் துயில் எழுதல். ☐
3. நாள்தோறும் உடல், உடைகளைத் தூய்மை செய்தல். ☐
4. உண்ணும்போது உணவுப் பொருள்களைச் சிந்துதல். ☐
5. காலையிலும் மாலையிலும் நடைப் பயிற்சி செய்தல். ☐

**இளங்கோவன் எழுதிய விடுப்பு மடல்**

சிதம்பரம்,
30–08–2011.

அனுப்புதல்
அ. இளங்கோவன்,
36, நக்கீரர் தெரு,
சிதம்பரம்–608 001.

பெறுதல்
வகுப்பாசிரியர் அவர்கள்,
நான்காம் வகுப்பு 'அ' பிரிவு,
நகராட்சி நடுநிலைப் பள்ளி,
சிதம்பரம் –608 001.

மதிப்பிற்குரிய ஐயா / அம்மா,

என்னுடைய தமக்கையின் திருமணம் 31–08–2011 அன்று திருத்தணியில் நடைபெறுவதால், என்னால் பள்ளிக்கு வர இயலாது. எனவே, 30–08–2011, 31–08–2011 ஆகிய இரு நாள்களுக்கும் விடுப்பு வழங்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

தங்கள்உண்மையுள்ள,
அ. இளங்கோவன்.

**5. இளங்கோவன் எழுதிய விடுப்பு மடலை மாதிரியாகக் கொண்டு பின்வரும் காரணங்களுக்காக ஒரு விடுப்பு மடல் எழுதுக: உடல்நலமின்மை / திருவிழா .**



## மின் அஞ்சல் (e. mail)

தாள் இல்லாமல், கம்பி இல்லாமல் வான் வழியே மின்அலைகள் மூலம் கணினியால் அனுப்பப்படும் செய்தி மின் அஞ்சல் ஆகும். வைய வான் வலை (*world wide web*) மின் அஞ்சலின் ஊடகம் ஆகும். ஆவணங்கள், வண்ணப்படங்கள், குறுஞ்செய்திகள், கடிதச் செய்திகள் போன்றவற்றை நாம் விரும்பும் முகவரிக்குக் கணப்பொழுதில் இதனால் அனுப்பிவிடலாம். தொலைத் தொடர்புத் துறையில் மின் அஞ்சல் பெருந்தொண்டாற்றி வருகிறது.

# 6. ஒரு கார்காலப் பொழுது

“குயில்கூவிக் கொண்டிருக்கும்; கோலம் மிகுந்த
மயில்ஆடிக் கொண்டிருக்கும்; வாசம் உடையநற்
காற்றுக் குளிர்ந்தடிக்கும்; கண்ணாடி போன்றநீர்
ஊற்றுகள் உண்டு; கனிமரங்கள் மிக்கஉண்டு;
பூக்கள் மணங்கமழும்; பூக்கள்தொறும் சென்றுதே
னீக்கள் இருந்தபடி இன்னிசை பாடிக்களிக்கும்.....”

எனப் பாவேந்தர் பாரதிதாசன் குறிஞ்சி நிலப்பகுதியை அழகாக வருணித்துள்ளார். இதைப் போன்ற ஓர் அழகிய மலைத்தொடர். அம்மலையில் இருந்து வீழும் அருவிகள்; அருகில் ஒரு சிற்றூர். அந்தச் சிற்றூரில் கார்காலப் பொழுதில் ஒருநாள்.....

நிலம் குளிர்ந்தது; கருமேகங்கள் மலையைத் தழுவிப் பெருமழையைக் கொட்டித் தீர்த்தன. எங்கும் வெள்ளம் . . . . . . வெள்ளம் . . . . . ! முல்லைநில மக்கள் நீண்டு வளைந்த கோல்களைத் தம் கைகளில் வைத்திருந்தனர். அவர்கள் மேடான இடத்தை நோக்கிக் கால்நடைகளை ஓட்டிச் சென்றனர். நிலம் எங்கும் செக்கச் சிவந்த செங்காந்தள் மலர்கள்; அவ்விதழ்களில் நீர்த்துளிகள் தூங்குவது போல் காணப்பட்டன. மக்களோ மிகுதியான குளிரால் வருந்தினர். கன்னங்களும் பற்களும் நடுக்கத்தில் கிடுகிடு என்று பறை கொட்டின.

மிக்க குளிரால் விலங்குகள் மேய்ச்சலை மறந்தன; குரங்குகள் நடுநடுங்கின; பறவைகள் மரப்பொந்துகளில் பதுங்கின; பசுக்கள் தம் கன்றுகளைப் பால் குடிக்கவிடாமல் எட்டி உதைத்தன.

மென்மையான முசுண்டைக் கொடிகள் வேலியில் படர்ந்து இருந்தன. அவற்றில் மணமிக்க வெண்மலர்கள் பூத்துக் குலுங்கின; அருகே உள்ள புதர்களில் பீர்க்க மலர்கள் பொன்போல் மலர்ந்தன.

அருவிநீர் பாய்ந்து ஓடியது. அதன் ஈர வெண்மணல் பரப்பில் கொக்குகள் திரிந்தன. அவை நீண்ட கால்களையும் வெண்மையான இறகுகளையும் உடையன. தம் இரையைத் தேடி அங்கும் இங்கும் சுற்றின. சிவந்த கால்களை உடைய நாரைகள் மீன்களைக் கவர்ந்து உண்ணக் காத்திருந்தன.

மிகுதியான மழை பெய்ததால், மேகங்கள் வற்றின; அவை வெண்மை நிறத்தோடு எழுந்து எங்கும் பரவின; வயல்களில் முற்றிய நெற்கதிர்கள் வளைந்து சாய்ந்தன. அருகில், அடிபெருத்த பாக்கு மரங்கள் ஓங்கி வளர்ந்திருந்தன.

அவற்றின் உச்சியில் நீலமணி போன்ற வளமான மடல்கள் விரிந்திருந்தன. பாக்குக் குலைகள் திரண்டு நல்ல நிறத்தோடு பருத்து முற்றி நின்றன. சோலைகளில் பல வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கின; அக்குளிர்ந்த பூக்களில் மழைத்துளிகள் ஒட்டிக்கொண்டிருந்தன. கதிரவனின் ஒளியால் அவை பல வண்ணங்களில் சுடர் வீசின.



அந்தி சாயும் நேரம். மென்மையான சாயலை உடைய மகளிர், தம் கைகளில் சங்கு வளையல்களை அணிந்திருந்தனர். அவர்கள் மூங்கில் போன்ற அழகிய தோள்களையும், முத்துப் போன்ற பற்களையும் பெற்றிருந்தனர்; கண்களுக்குத் தகுந்த மையைத் தீட்டி அழகுபடுத்தியிருந்தனர்; செவிகளில் குண்டலங்களை அணிந்திருந்தனர். கார்காலம் ஆதலின், இரவுபகல் எது எனத் தெரியாது தவித்தனர். பூத்தட்டில் வைத்திருந்த பிச்சி அரும்புகள் மலர்ந்து மணம் வீசின. அம்மலர்கள் மலர்ந்ததைக் கண்டு, மாலைப்பொழுது வந்ததை அறிந்தனர். தம் கூந்தலில் மல்லிகை, முல்லை மலர்களைச் சூடினர். இல்லங்கள் தோறும் விளக்குகளை ஏற்றினர்; நெல்லையும் மலரையும் தூவி ஒளியினை வணங்கினர்.

வாடைக்காற்று தொடர்ந்து வீசியது. குளிர்ந்த நீரை எவரும் அருந்தவில்லை. நெருப்பருகே அமர்ந்து குளிரைப் போக்கிக்கொண்டனர்.

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

### 1. அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.

வருணனை ______ கார்காலம் ______
வெள்ளம் ______ முல்லைநிலம் ______
கதிரவன் ______ அந்தி ______
வாடை ______ செவி ______

### 2. பிரித்து எழுதுக.

குளிர்ந்தடிக்கும் ______ மணங்கமழும் ______
கருமேகம் ______ செங்காந்தள் ______
மரப்பொந்து ______ வெண்மணல் ______

### 3. சேர்த்து எழுதுக.

முசுண்டை + கொடி ______ நெல் + கதிர் ______
அ + மலர் ______ வாடை + காற்று ______

### 4. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. மலையில் இருந்து வீழும் ______ அருகே ஒரு சிற்றூர் இருந்தது.
2. செங்காந்தள் மலர் இதழ்கள் மீது உள்ள நீர்த்துளிகள் ______ போல் காணப்பட்டன.
3. பறவைகள் மரப் பொந்துகளில் ______.
4. வயல்களில் முற்றிய ______ வளைந்து சாய்ந்தன.
5. பிச்சி மலர்கள் மலர்ந்ததைக் கண்டு ______ பொழுதை அறிந்தனர்.
6. நெருப்பு அருகே அமர்ந்து ______ போக்கிக் கொண்டனர்.

### 5. தொடர் அமைத்து எழுதுக.

(எ.கா.)

மணமிக்க - மகளிர் தம் கூந்தலில் மணமிக்க மலர்களையே சூடுவர்.

கார்காலம் ______

பெருமழை ______

வெள்ளம் ______

**6. விடையளிக்க.**

1. மலையில் குயிலும் மயிலும் என்ன என்ன செய்து கொண்டிருந்தன ?
2. ஆடு மாடுகளை மேய்ப்போர், கால்நடைகளை எங்கே ஓட்டிச் சென்றனர் ?
3. ஈர வெண்மணலில் கொக்குகள் ஏன் திரிந்தன ?
4. மகளிர் தம் செவிகளில் எந்த அணிகலனை அணிந்திருந்தனர் ?

**7. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை தருக.**

1. பாரதிதாசன் குறிஞ்சி நிலத்தை எவ்வாறு வருணிக்கிறார் ?
2. குளிரின் மிகுதியால் விலங்குகள் என்ன செய்தன ?
3. அருவியின் வெண்மணல் பரப்பில் திரிந்த பறவைகளின் தோற்றத்தை விவரி.
4. மாலை நேரத்தில் மகளிரின் செயல்களை விவரி.

**8. எடுத்துக்காட்டில் உள்ளதைப் போல் வருணித்து கூறுக/எழுதுக.**

(எ.கா.)



குயில் கருமை நிறமாக இருக்கும்.
அது கூவுவது இனிமையாக இருக்கும்.
காகம் போன்ற தோற்ற முடையது.





**9. பாடப்பகுதியில் வந்துள்ள வருணனைத் தொடர்களை எடுத்து எழுதுக.**

(எ.கா.)

கோலம் மிகுந்த மயில்.
செக்கச் சிவந்த செங்காந்தள் மலர்.

## 10. சொற்களின் முன்னால் வருணனைச் சொற்களை இணைத்துத் தொடரை நீட்டுக.

(எ.கா.)



வண்ண மயில்.

அழகான வண்ண மயில்.

தோகையுடைய அழகான வண்ண மயில்.

நீண்ட தோகையுடைய அழகான வண்ண மயில்.



____________________

____________________

____________________

____________________



____________________

____________________

____________________

____________________

## 11. எதிர்ச் சொற்களை இட்டுத் தொடரை நிறைவு செய்க.

(எ.கா.)

மலை மேல் மேகம் சூழ்ந்தது; மரத்தின் கீழ் மயில் ஆடியது.

1. சிற்றூரின் அருகே அருவி உள்ளது; ____________ பேரூர் உள்ளது.
2. நன்மையை வரவேற்க வேண்டும்; ____________ எதிர்த்து நிற்க வேண்டும்.
3. அனைவரும் ஒற்றுமையுடன் வாழவேண்டும்; ____________ பாராட்டக்கூடாது.
4. விளையாட்டில் வெற்றியையும் ____________ சமமாகக் கருத வேண்டும்.
5. பிறரின் சிறந்த பண்புகளைப் புகழ்ந்து பேசவேண்டும். ஆனால், எவரையும் ____________ பேசக்கூடாது.

### செயல் திட்டம்

காடு, மலை, கடல் போன்ற இயற்கைக் காட்சிகள் பற்றிக் குறிப்பெடுத்து வகுப்பறையில் விவரித்துப் பேசுக / எழுதுக.

படங்களைச் சேகரித்துப் படத்தொகுப்பு அமைக்க.

# 7. தமிழன் இதயம்



தமிழன் என்றோர் இனமுண்டு;
தனியே அவற்கொரு குணமுண்டு;
அமிழ்தம் அவனுடை வழியாகும்;
அன்பே அவனுடை மொழியாகும்;

அறிவின் கடலைக் கடைந்தவனாம்;
அமிர்தத் திருக்குறள் அடைந்தவனாம்;
பொறியின் ஆசையைக் குறைத்திடவே
பொருந்திய நூல்கள் உரைத்திடுவான்;




கலைகள் யாவினும் வல்லவனாம்
கற்றவர் எவர்க்கும் நல்லவனாம்
நிலைகொள் பற்பல அடையாளம்
நின்றன இன்னும் உடையோனாம்.



சிற்பம் சித்திரம் சங்கீதம்
சிறந்தவர் அவனினும் எங்கேசொல் ?
வெற்பின் கருங்கல் களிமண்போல்
வேலைத் திறத்தால் ஒளிபண்ணும்.

மானம் பெரிதென உயிர்விடுவான்;
மற்றவர்க் காகத் துயர்படுவான்;
தானம் வாங்கிடக் கூசிடுவான்;
'தருவது மேல்' எனப் பேசிடுவான்.

– நாமக்கல் கவிஞர். வெ. இராமலிங்கம்



| | | |
|---|---|---|
| பெயர் | : | இராமலிங்கம். |
| பெற்றோர் | : | வெங்கடராமன்–அம்மணி அம்மாள். |
| பிறப்பிடம் | : | மோகனூர் – நாமக்கல் மாவட்டம். |
| காலம் | : | 19.10.1888 – 24.08.1972. |
| சிறப்பு | : | விடுதலைப் போராட்ட வீரர். தமிழ்நாடு அரசவைக் கவிஞர். கதை, கவிதைகளை எழுதித் தமிழ் வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றியவர். |

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

**1. அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.**

அமிழ்தம் ______________ பொறி ______________

சிற்பம் ______________ வெற்பு ______________

தானம் ______________

**2. பிரித்து எழுதுக.**

என்றோர் ______________ இனமுண்டு ______________

பற்பல ______________ கருங்கல் ______________

பெரிதென ______________

**3. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. தமிழனின் வழி______________; அவனுடைய மொழி______________.
2. தமிழன் மானத்தைப் பெரியது எனக் கருதி______________இழப்பான்.
3. பொறிகளின் ஆசைகளைக் குறைத்திடப் பொருந்திய ______________ உரைத்திடுவான்.
4. பிறரிடம் ______________ வாங்கிடக் கூசிடுவான்.

**4. விடையளிக்க.**

1. தமிழர்களின் புகழ்பெற்ற அறநூல் எது ?
2. தமிழர்கள் எந்தெந்தக் கலைகளில் சிறந்தவர்கள் ?
3. தமிழர்கள் யாருக்காகத் துயர்ப்படுவர் ?

**5. ஆறுவரிகளுக்கு மிகாமல் விடை தருக.**

தமிழர்களின் சிறந்த பண்புகளாக ஆசிரியர் கூறுவன யாவை ?

**6. உனக்குத் தெரிந்த இரண்டு அற நூல்களை எழுதுக.**

(எ.கா.)திருக்குறள் ______________

**7. 'கை' என்னும் முன்னொட்டுச் சொல்லைப் பயன்படுத்தி ஐந்து சொற்கள் எழுதுக.**

(எ.கா.) கைக்குட்டை ______________ ______________

______________ ______________ ______________

**8. நிறைவு செய்க.**

1. குளத்தில் மலரும் ☐☐☐
2. கல்லில் செதுக்கும் கலை ☐☐☐☐
3. இதனால் சிலை செய்யலாம் ☐☐☐☐☐

### அறிந்து கொள்க

அவன் + கு = அவற்கு; அவர் + கு = அவர்க்கு

# 8. பொம்மை உலகம்

தமிழ் நாட்டில் உள்ள பழைய நகரங்களில் ஒன்று சேலம் மாநகரம். இந்நகரம் தமிழர்களின் கலை இலக்கியப் பண்பாட்டுச் சின்னமாக இன்றளவும் விளங்கி வருகிறது. முக்கனிகளில் ஒன்றான மாம்பழத்திற்கு உலகப் புகழ் பெற்றது சேலம். இந்நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள போஸ் திடலில் நடைபெற்ற பொருட்காட்சிக்குத் தன் பெற்றோருடன் மதன் சென்றான்.

பொருட்காட்சியில் அமைக்கப் பட்டிருந்த சிறுவர் அரங்கில் மூவரும் நுழைந்தனர். அதன் முதல் பகுதியில் சிறுவர்களுக்கான பல்வேறு பொம்மைகள் பகுதி பகுதியாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அதன் முன்பகுதியில், 'பொம்மை உலகம் உங்களை வரவேற்கிறது' என்று அச்சிடப்பட்ட தொடர் ஒட்டப்பட்டிருந்தது. பொம்மைகளைப் பார்த்த மதன், 'எவ்வளவு அழகான பொம்மைகள்' என்று மகிழ்ந்தான். அவன் தந்தை, "பொம்மைகளைக் கண்டு, மயங்காத குழந்தைகளும் உண்டோ ?" என்றார். அம்மாவோ, "பொம்மைகளைப் பார்! உனக்குப் பிடித்ததைச் சொல். வாங்கித் தருகிறேன்" என்றார்.







"அம்மா! அதோ பாருங்கள். தஞ்சாவூர் தலையாட்டிப் பொம்மைகள்" என்றான் மதன்.

"ஆம். அவை உலகப் புகழ் பெற்றவை. தலையை மட்டும் ஆட்டிக் கொண்டிருக்கும் பெண் பொம்மையும் தஞ்சாவூர்ப் பொம்மைதான்" என்றாள் அம்மா.





மரப் பொம்மைகள் உள்ள பகுதிக்குச் சென்றனர். இரண்டு கிளிகள் உரையாடுவது போன்று அமைக்கப்பட்ட மரப் பொம்மைகள் அவர்களை வெகுவாகக் கவர்ந்தன. மரத்தாலான நாய்ப் பொம்மையை எடுத்து நகர்த்தினான் மதன். "இந்த நாயை எங்கு வேண்டுமானாலும் இழுத்துச் செல்லலாம். கால்களுக்கு மாற்றாகச் சக்கரங்கள் உள்ளன" என்றான் மதன். "மரத்தாலான பொம்மைகள் அழகாகவும் நுட்பமாகவும் அமைக்கப் பட்டுள்ளன" என்றார் தந்தை. அப்பகுதியில் மரத்தாலான யானைப் பொம்மைகள், 'மரப்பாச்சிகள்' ஆகியவற்றையும் கண்டுகளித்து அடுத்த பகுதிக்குச் சென்றனர்.




நெகிழியால் செய்யப்பட்ட விதவிதமான பொம்மைகள் அரங்கைப் பொலிவூட்டின. நாய், குதிரை, யானை, ஒட்டகச் சிவிங்கிப் பொம்மைகள் உண்மையான விலங்குகள் போலவே காட்சியளித்தன. தாளம்போடும் பொம்மை, கைத்தட்டும் பொம்மை, நடனம் ஆடும் பொம்மைகள் அரங்கை வலம் வந்தன. எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டே, துணிப் பொம்மைகள் உள்ள பகுதிக்கு வந்தனர்.





துணியால் செய்யப்பட்ட பெண், கரடி, கிளி, மைனா, பூனை முதலிய பொம்மைகளைப் பார்த்து மகிழ்ந்தனர். மதன், "நாமும் துணியில் இதுபோன்று பொம்மைகளைச் செய்யலாமே" என்றான். தந்தை, "ஆம். நாமே பொம்மைகளைச் செய்யும்பொழுது நமது கைகளும், மூளையும், மனமும் இணைந்து செயல்படும். இதனால், அறிவு பெருகுவதோடு மகிழ்வும் மனதில் தெளிவும் ஏற்படும் என்றார்."

அழகான குதிரைப் பொம்மைகளைப் பார்த்தனர். "மண்ணாலும் மரத்தாலும் நெகிழியாலும் மெழுகாலும் பனை ஓலைகளாலும் கிளிஞ்சல்களாலும் பலவிதமான பொம்மைகள் செய்யப்பட்டு உள்ளன" என்றார் தந்தை.

"எங்கள் ஊரில் பெரிய அளவில் களிமண்ணால் குதிரை உருவங்களைச் செய்வர். அவ்வுருவங்கள் கரையாமல் இருக்கச் சூளையில் இட்டுச் சுடுவர். அவற்றின் மீது வண்ணங்களைப் பூசி அழகுபடுத்துவர். இக்குதிரைகளைக் குறிப்பிட்ட நாளில் ஊர் மக்கள் மேளதாளத்துடன் தோளில் சுமந்து சென்று ஊர் எல்லையில் உள்ள ஐயனார் கோவிலில் நேர்த்திக்கடனாக வைப்பர். இதற்குப் 'புரவி எடுப்பு விழா' என்று பெயர் " என்றார் அம்மா.



மூவரும் பேசிக்கொண்டே மகளிர் சுய உதவிக் குழுக்கள் செய்த பொம்மைகள் அடுக்கி வைத்திருந்த பகுதிக்குச் சென்றனர். பூனை, எலி, குருவி, கிளி, குதிரை, பிள்ளையார், முருகன் பொம்மைகளைத் துணி, பஞ்சு, பனையோலை இவற்றைக் கொண்டு செய்திருந்தனர். மெழுகினால் செய்யப்பட்ட பொம்மைகளும் தோலினால் செய்யப்பட்ட பொம்மைகளும்,கடல்சிப்பி ஓட்டிலிருந்து உருவாக்கப்பட்ட பொம்மைகளும் அரங்கில் நிறைந்திருந்தன. இப்பொம்மைகளைப் பார்த்த மதனின் அம்மா "இப்பொம்மைகளை வாங்கலாம், இதனால் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் பயனடையும். மேலும் மேலும் பொம்மைகள் செய்ய மகளிர் ஊக்கப் படுத்தப் படுவர்" என்றார். தந்தையும், 'ஆம்'. என்றார். மதனுக்குப் பிடித்த சில பொம்மைகளையும் வாங்கினர்.

மதன், "நானும் களிமண்ணால் குரங்கு, யானை, குதிரை, பூனை, தொலைக்காட்சிப் பெட்டி, வானொலிப் பெட்டி போன்ற உருவங்களைச் செய்வேன்"



“பொருட்காட்சியில் வாங்கிய பொம்மைகளையும் நீ செய்த பொம்மைகளையும் சேகரித்துப் ‘பொம்மைக் கண்காட்சி’ நடத்தலாம்”என்றார் தந்தை. அனைவரும் பொம்மை உலகம் பார்த்த பூரிப்புடன் வீடு திரும்பினர்.

நீங்களும் களிமண், துணி, பஞ்சு, அட்டை, தாள், ஓலை இவற்றைப் பயன்படுத்திப் பொம்மைகள் செய்யலாம்; பள்ளியில் பொம்மைக் கண்காட்சி நடத்தலாம். முயன்றால் முடியாததும் உண்டோ ?

## படிப்போம் ! சிந்திப்போம் ! எழுதுவோம் !

### 1. அகர முதலி பார்த்துப் பொருள் எழுதுக.

சூளை ______________ பொலிவு ______________
சின்னம் ______________ புரவி ______________

### 2. சேர்த்தெழுதுக.

மா+பழம் ______________ மரம்+பொம்மை ______________
இ+குதிரை ______________ வானொலி+பெட்டி ______________

### 3. பிரித்து எழுதுக

மாநகரம் ______________ ஒட்டப்பட்டிருந்தன ______________
தலையாட்டி ______________ தொலைவிலிருந்து ______________

### 4. கோடிட்ட இடத்தை நிறைவு செய்க.

1. மாம்பழத்திற்குப் புகழ் பெற்ற நகரம் ______________.
2. பொம்மைகளைக் கண்டு மயங்காத ______________ உண்டோ ?
3. நாய் பொம்மையில் கால்களுக்கு மாற்றாக ______________ உள்ளன.
4. மண்ணாலும் ________ நெகிழியாலும் பொம்மைகள் செய்யப்படுகின்றன.
5. பொம்மைகளை வைத்து______________ கண்காட்சி நடத்தலாம்.

## 5. விடையளிக்க.

1. பொருட்காட்சியின் முன்பகுதியில் ஒட்டப்பட்டிருந்த சொற்றொடர் யாது ?
2. பொருட்காட்சியில் இடம்பெற்றிருந்த மரப்பொம்மைகளை எழுதுக.
3. பொருட்காட்சியில் காணப்பட்ட நெகிழியால் ஆன பொம்மைகள் யாவை ?
4. துணியால் செய்யப்பட்டிருந்த பொம்மைகள் யாவை ?
5. புரவி எடுப்பு – என்றால் என்ன ?
6. மகளிர் சுயஉதவிக் குழுக்கள் எவற்றைக் கொண்டு பொம்மைகள் செய்திருந்தனர் ?
7. மகளிர் குழுக்கள் செய்த பொம்மைகளை ஏன் வாங்கவேண்டும் ?

## 6. சொற்றொடர்ப் படிக்கட்டு அமைக்க.

(எ.கா.) வடமதுரை,
மதுரைக்காஞ்சி,
காஞ்சிப்பட்டு,
பட்டுக்கோட்டை,
கோட்டைவாசல்,
வாசல்கதவு.

சிட்டுக்குருவி

தென்மேற்கு

## 7. தொகைச் சொற்களை விரித்து எழுதுக.


முத்தமிழ் ________________, ________________, ________________

மூவேந்தர் ________________, ________________, ________________

முக்கனி ________________, ________________, ________________

## 8. ஒரு சொல் பல பொருள் – எழுதுக.

(எ.டு)




## 9. பின்வரும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.

தேனீக்கள் மலைப் பொந்துகள், மரக்கிளைகள், கோபுரங்களின் இடுக்குகள் போன்ற இடங்களில் கூட்டை அமைத்துக் கொள்கின்றன. தேனீக் குடும்பத்தில் இராணித் தேனீ, ஆண்தேனீ, வேலைக்காரத் தேனீ ஆகிய மூவகையான பிரிவுகள் உள்ளன. வேலைக்காரத் தேனீக்களே தேன் எடுத்தல், கூட்டைக் காத்தல், தேனடை கட்டுதல் போன்ற வேலைகளைச் செய்கின்றன. ஆண் தேனீக்கள் வேலை எதுவும் செய்வதில்லை. இனத்தைப் பெருக்கும் வேலையை மட்டுமே இராணித் தேனீ செய்கின்றது. ஒரு கூட்டில் ஒரு இராணித் தேனீ மட்டுமே இருக்கும். மற்றொரு இராணித் தேனீ அக்கூட்டில் தோன்றினால் அது தனக்கு வேண்டிய வேலைக்காரத் தேனீக்கள், ஆண் தேனீக்கள் ஆகியவற்றைச் சேர்த்துக்கொண்டு அக்கூட்டைவிட்டு வெளியேறும். வேறு ஒரு புதிய தேன்கூட்டை அமைத்துக்கொண்டு வாழத் தொடங்கும்.



1. தேனீக்களில் மூன்று பிரிவுகள் யாவை ?
2. தேனீக்கள் தங்கள் கூட்டை எங்கெங்கே அமைத்துக்கொள்கின்றன ?
3. வேலைக்காரத் தேனீக்களின் வேலைகள் யாவை ?
4. தேன்கூட்டில் மற்றொரு இராணித்தேனீ தோன்றினால் என்ன நிகழும் ?

### செயல் திட்டம்

களிமண், துணி, பஞ்சு போன்ற பொருள்களைப் பயன்படுத்தி உனக்குப் பிடித்த பொம்மைகள் செய்து வருக.

# 9. ஒளிமயமான எதிர்காலம்

**வான்மதி:** அறிவியல் ஆசிரியர் கூறிய செயல்திட்டம் ஒன்றைச் செய்தோம். அவரவர் வீட்டுக் குப்பைக் கூடையில் காய்கறி மற்றும் உணவுக் கழிவுகள், அட்டை, தாள்கள் போன்ற மக்கும் குப்பைகளையும் நெகிழி போன்ற மக்காத குப்பைகளையும் தனித்தனியே வகைப்படுத்தினோம். மக்காத குப்பையை, மீள்சுழற்சி மூலம் பயன்படுத்தக் கூடியது, பயன்படுத்த முடியாதது எனப் பிரித்துத் தாளில் எழுதினோம். எங்கள் வீட்டுக் குப்பைக்கூடையில் மக்கும் குப்பைகளான காய்கறிக் கழிவுகள், தாள்கள் இருந்தன. மக்காத குப்பையான நெகிழிப் பொருள்களும் இருந்தன.





**வளவன்:** என் வீட்டுக் குப்பைத் தொட்டியிலும் மக்கும் குப்பை, மக்காத குப்பை இரண்டுமே இருக்கும்.

**வான்மதி:** என் வீட்டிற்குப் போகும் வழியில் குப்பையை விற்றுக் காசாக்கும் ஒருவர், குப்பையிலிருந்து தாள்கள், அட்டைகள், நெகிழிக் குப்பிகள், இரும்பு, அலுமினியப் பொருள்கள், தடிமனான நெகிழிப் பொருள்கள் போன்றவற்றை மட்டும் எடுத்துக்கொண்டு மெல்லிய நெகிழிப் பொருள்களை அங்கேயே விட்டுச் சென்றுவிட்டார். அதற்குக் காரணம் தெரியவில்லை.

**வளவன்:** தடிமனான நெகிழிப் பொருள்களை மறுசுழற்சி செய்யலாம். மெல்லிய நெகிழிப் பொருள்களை மறுசுழற்சி செய்ய முடியாது. அதனால், அவற்றை அவர் அங்கேயே விட்டுச் சென்றிருப்பார்.

**வான்மதி:** மறுசுழற்சி செய்ய முடியாதவற்றை அரசு தடை செய்யலாமே! நாம் நம் அறிவியல் ஆசிரியரிடம் இதுபற்றிக் கூறித் தலைமையாசிரியர் வழியாக உரிய துறைக்குப் பரிந்துரை செய்யச் சொல்லலாம்.

**வளவன்:** நாம் மட்டுமா இதுபோன்ற பொதுநலம் குறித்துக் கவலைப்படுகிறோம்? என் வீட்டிற்கு அருகில் வாழும் பொறியாளரும் கவலைப்படுகிறார். அவர் எண்ணூர் அனல் மின் நிலையத்தில் பணியாற்றுகிறார். 100 வாட் திறனுள்ள 5 மின் விளக்குகள் 2¼ மணி நேரம் எரிவதற்கு, ஓர் அலகு(யூனிட்) மின்சாரம் தேவைப்படுகிறதாம்.அதற்கு 0.772கிலோகிராம் கரியை எரிக்க வேண்டுமாம்.



**வான்மதி:** அப்படியா! ஒரு 'யூனிட்' மின்சாரத்திற்கு 0.772 'கிலோகிராம்' கரியை எரிக்கவேண்டுமா? அப்படியானால் நாம் மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டுமே. ஒரே இடத்தில் அமர்ந்து படிப்பது, சாப்பிடுவது என முறைப்படுத்திக் கொண்டால், மின்விசிறி இயக்கம், மின்விளக்குப் பயன்பாடு போன்றவற்றில் மின்சாரத்தைச் சேமிக்கலாமே. தொடர்ந்து நிலக்கரியைப் பயன்படுத்தினால் இயற்கைவளம் குறையுமே.

**வளவன்:** அனல் மின்சாரம், புனல் மின்சாரம், அணு மின்சாரம் தவிர, சூரிய வெப்பம், காற்று, கடல் அலை முதலியவற்றில் இருந்தும் மின்சாரம் பெற அரசு முனைப்போடு செயல்படுகிறது. நாமும் அரசுக்கு ஒத்துழைத்து மின்சாரத்தை உண்டாக்கவும் சேமிக்கவும் துணை நின்றால், அரசின் திட்டங்கள் வெற்றிபெறும்.

**வான்மதி:** எங்கள் பள்ளி ஆண்டுவிழாவுக்குச் சிறப்பு அழைப்பாளராகச், சென்னை, 'மரபுசாரா எரிசக்தி முகமை'யில் பணியாற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் வந்திருந்தார். அவர் மின்உற்பத்தி பற்றிய பல தகவல்களைக் கூறினார்.



**வளவன்:** அப்படியா! அவர் என்ன சொன்னார்?

**வான்மதி:** காற்றாலை மின்உற்பத்தியில் தமிழகம் முன்னிலையில் உள்ளது. இந்திய அளவில் காற்றாலை மின்உற்பத்தியில் நாற்பது சதவீதம் தமிழகத்தில் ஆக்கப்படுகிறது. தமிழகத்தின் மொத்த மின்தேவையில் முப்பது சதவீதம் காற்றாலையின் மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது. சாண எரிவாயு, சூரியசக்தி பயன்படுத்தியும் மின்சாரம் உற்பத்தி செய்யலாம்.

'சூரிய மின்னாற்றல் திட்டம்' விரைவில் அரசு வெளியிட உள்ளது. சூரிய மின் உற்பத்திக்கு இருபத்தைந்து சதவீதம் முதல் ஐம்பது சதவீதம்வரை அரசுக்கொடை வழங்குகிறது. இன்னும் பத்து ஆண்டுகளுக்குள் இத்திட்டம் மூலம் ஆயிரம் 'மெகாவாட்' மின் உற்பத்தி செய்யத் திட்டமிட்டுள்ளனர். கருவேல மரங்களைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யும் திட்டத்தை மேலும் விரிவுபடுத்த முனைகிறது அரசு.



**வளவன்:** இவ்வளவு செய்திகளா? வியப்பாக இருக்கிறதே!

**வான்மதி:** அதுமட்டுமா! சென்னை கோயம்பேட்டில் உள்ள காய்கனி அங்காடிப் பகுதியில் பெருமளவில் குவியும் காய், கனி, பூ கழிவுகளிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு ஐதராபாத்தில் உள்ள நிறுவனத்தோடு அரசு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. நடுவண்அரசு, சூரிய சக்தியில் இயங்கும் மிதிவண்டிகளுக்கு 'அரசுக்கொடை' அளிக்கிறது.

**வளவன்:** நாடு தன்னிறைவு அடைய பல்வேறு வகைகளில் கிடைக்கும் மின்சக்தியைச் சிக்கனமாகப் பயன்படுத்திட அனைவரும் பாடுபட வேண்டும்.

*'மின்சாரச் சிக்கனம்; தேவை இக்கணம்.'*
*'குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை எனப் பிரித்துக் குப்பைத் தொட்டிகளில் போடுவீர்.'*

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

### 1. அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.

மறுசுழற்சி ____________ முகமை ____________

அனல் ____________ புனல் ____________

அங்காடி ____________

### 2. பிரித்து எழுதுக.

மக்குவதில்லை ____________ பொறியியல் ____________

கருத்தரங்கு ____________ காற்றாலை ____________

மின்னாற்றல் ____________

### 3. கோடிட்ட இடத்தை நிறைவு செய்க.

1. மறுசுழற்சி செய்யமுடியாத மெல்லிய ____________ பொருள்களை விட்டுச் சென்றிருப்பர்.
2. தொடர்ந்து நிலக்கரியைப் பயன்படுத்தினால் ____________ வளம் குறையும்.
3. காற்றாலை மின் உற்பத்தியில் ____________ இந்திய அளவில் முதலிடம் பெற்றுள்ளது.
4. நடுவண் அரசு சூரிய சக்தியில் இயங்கும் ____________ அரசுக்கொடை அளிக்கிறது.

### 4. விடையளிக்க.

1. வான்மதி வீட்டுக் குப்பைக் கூடையில் கிடந்த பொருள்கள் யாவை?
2. ஓர் அலகு மின்சாரம் உண்டாக்கத் தேவைப்படும் கரி பற்றிப் பொறியாளர் என்ன கூறினார்?
3. மின்சாரத்தை மிச்சப்படுத்தும் வழிமுறைகள் யாவை?
4. சூரிய சக்தியைக் கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்ய அரசு செய்யும் உதவிகள் யாவை?

### 5. செல்பேசியின் நன்மை தீமைகளை விவாதித்துப் பட்டியலிடுக.



| நன்மைகள் | தீமைகள் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

6. 'ஏனெனில்' 'அதனால்' என்னும் காரண காரிய இணைப்புச் சொற்களைப் பயன்படுத்தித் தொடர் அமைக்க.

1. மின் விளக்குகள் அணைந்தன ________________ மின்சாரம் தடைபட்டது.
2. மழைநீர் சேகரிப்புத் தொட்டி அமைத்தல் வேண்டும். ________________ நிலத்தடி நீர்மட்டம் உயரும்.
3. ஓசோன் படலத்தில் துளை விழுந்துள்ளது ________________ பூமி அதிக வெப்பமடைகிறது.
4. மரங்களை அழிக்கக் கூடாது ________________ மழை குறைந்துவிடும்.
5. நீண்ட நேரம் தொலைக்காட்சி பார்க்கக்கூடாது ________________ கண்பார்வை மங்கிவிடும்.

7. ஒருசொல் இருபொருள்.

தொடருக்கு எதிரே சரியான பொருளை எடுத்து எழுதுக.

1. இரவில் ஒளிவீசுவது மதி ________________
   கண்ணன் மதி நிறைந்தவன் ________________
2. அதிகாலையில் காகம் கரையும் ________________
   பாலில் சர்க்கரை கரையும் ________________
3. இலை தழைகளைத் தின்பது ஆடு ________________
   பரதநாட்டியத்தை நன்றாக ஆடு ________________
4. நகரத் தூய்மையை நாளும் நாடு ________________
   இந்தியா நம் தாய் நாடு ________________
5. திருக்குறள் உலகம் போற்றும் ஓர் அற நூல் ________________
   ஆடை நெய்யப் பயன்படுவது நூல் ________________

8. நெகிழியால் செய்யப்பட்ட எந்தெந்தப் பொருள்களைத் தடைசெய்ய வேண்டும் என்று நீ விரும்புகிறாய்.

________________

________________

________________

### செயல் திட்டம்

நீ வாழும் இடத்தில் உள்ள மரபுசாரா எரிசக்தித் திட்டங்கள் (சாண எரிவாயு, சூரிய அடுப்பு, கடலலை, காற்றாலை) பயன்படுத்தும் முறையை அறிந்து எழுதுக.

# 10. அறிவு வந்தது

## காட்சி – 1

(ஆனந்தன் முழுச் சோம்பேறி. ஒரு வேலையும் செய்யமாட்டான். ஆனால், உழைக்காமலேயே செல்வந்தன் ஆகவேண்டும் என்னும் எண்ணம் கொண்டவன். அவன் மனைவி முல்லை, நயமாகவும் மென்மையாகவும் உழைப்பின் சிறப்பை அடிக்கடி எடுத்துச் சொல்வாள். ஒருநாள் ........)

**முல்லை:** ஒரு வேலையும் செய்யாது உண்பதும் உறங்குவதுமாகக் காலம் கழிக்கலாமா ? பெற்றோர் தேடிவைத்த செல்வம் எத்தனை நாள்களுக்கு இருக்கும் ? 'குந்தித் தின்றால் குன்றும் மாளும்' என்னும் பழமொழியை அறியமாட்டீர்களா ?

**ஆனந்தன்:** உலகிலேயே எளிய வேலை எது தெரியுமா ? பிறருக்கு அறிவுரை கூறுவதுதான். உழைக்காமலே செல்வந்தன் ஆவேன்; மாடமாளிகையில் வாழ்வேன்! 'கொடுக்கின்ற தெய்வம் கூரையைப் பிய்த்துக்கொண்டு கொடுக்கும்' என்பதும் ஆன்றோர் வாக்குதானே !

**முல்லை:** உழைக்கிறவர்களுக்குத்தான் தெய்வமும் உதவும். 'சொப்பனத்தில் கண்ட அரிசி சோறாகுமா ?'

**ஆனந்தன்:** அரிசி சோறாகிறதோ இல்லையோ ! நான் உறுதியாகச் செல்வந்தன் ஆவேன்; சீரும் சிறப்புமாய் வாழ்வேன். இதற்கான வழிகளைச் சொல்லுகின்ற சித்தர் ஒருவர் மலைமேல் வாழ்கின்றார். அவரிடம் போகிறேன்.

**முல்லை:** 'மந்திரத்தால் மாங்காய் விழுவதில்லை.' சென்று பாருங்கள்; அறிவு பெற்று வாருங்கள்.

(முல்லை வீட்டினுள் செல்கிறாள். சித்தரைக் காண காட்டு வழியே ஆனந்தன்செல்கிறான்)

## காட்சி – 2

(வழியில் ஒரு மாமரத்தின் அடியில் சிங்கம் வயிற்று வலியால் துடித்துக் கொண்டிருக்கிறது. அதன் அருகில் ஒரு யானையும் தொண்டைவலியால் வருந்திக் கொண்டிருக்கிறது. நடந்த களைப்பால் ஆனந்தன் மரத்தின் அடியில் ஓய்வெடுக்க வருகிறான்.)


**சிங்கம் :** தம்பி ! எங்கே போகிறாய் ?

**ஆனந்தன்:** மலை உச்சியில் வாழும் சித்தரிடம் செல்வந்தன் ஆவதற்கு வழி கேட்கப் போகிறேன்.

**சிங்கம் :** அப்படியா ! எனக்குத் தீராத வயிற்றுவலி. எதையும் சாப்பிட முடியவில்லை. உடலும் மெலிந்து இளைத்து விட்டது. 'எறும்பு ஊரக் கல்லும் தேயும்' அல்லவா ? இதனைச் சித்தரிடம் கூறி, என் வலி தீர வழி கேட்டு வருவாயா ?

**ஆனந்தன்:** உறுதியாகக் கேட்டு வருகிறேன். 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பதை நான் அறியாதவனா ?

**யானை :** தம்பி...... தம்பி....... என்னுடைய குறை தீரவும் வழி கேட்டு வருவாயா ?



**ஆனந்தன்:** 'யானை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன்' என்பார்களே ! உனக்கு என்ன குறை ?

**யானை :** என் தொண்டையில் ஏதோ மாட்டிக் கொண்டுள்ளது. வலியால் துடிக்கிறேன். உண்ணவும் முடியவில்லை. உடல் மெலிந்து கொண்டே வருகிறது. என்ன செய்வேன் ? 'யானைக்கும் அடி சறுக்கும்' அல்லவா ?

**ஆனந்தன்:** ஐயோ, பாவம் ! உறுதியாக வழி கேட்டு வருகிறேன்.

(அப்போது மாமரம் பேசத் தொடங்கியது)

**மாமரம்:** தம்பி...... தம்பி....... என் குறையைக் கேள். ஒவ்வோர் ஆண்டும் ஏராளமான மொட்டுகள் விடுகிறேன். அவை அனைத்தும் பூவாகி, காயாகிப் பின்பு கனியாக மாறவேண்டும் அல்லவா ? ஆனால், அனைத்து மொட்டுகளும் மலராமல் கருகி விடுகின்றன. ஒருபோதும் காய்ப்பதே இல்லை. 'ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்' என்பார்கள். எனவே, எனக்கும் ஒரு வழி கேட்டு வருவாயா ?

**ஆனந்தன்:** அப்படியா...... உறுதியாய் வழி கேட்டு வருவேன் ; உன் குறை தீர்ப்பேன்.

## காட்சி – 3

(ஆனந்தன் சித்தரிடம் சென்று சிங்கம், யானை, மாமரத்தின் குறைகளையும் தன் குறையையும் கூறி, அவை தீர வழி கேட்டான்.)

**சித்தர் :** மாமரத்தின் அடியில் தங்கப் புதையல் உள்ளது. அதைத் தோண்டி எடுத்துவிட்டால் மாமரம் பூக்கும்; காய்க்கும். யானையின் தொண்டையில் விலையுயர்ந்த வைரக்கல் ஒன்று மாட்டிக் கொண்டுள்ளது. அதை எடுத்துவிட்டால் யானையின் நோய் நீங்கும்.

**ஆனந்தன்:** சிங்கத்தின் வயிற்றுவலி.......

**சித்தர் :** முழுச் சோம்பேறி மனிதன் ஒருவனை முதன்முதலில் சிங்கம் பார்க்கும்போது, அதன் வயிற்றுவலி தானே நீங்கிவிடும்.

**ஆனந்தன்:** நான் பணக்காரன் ஆவதற்கு வழி சொல்லவில்லையே !

**சித்தர் :** ஏன் சொல்லவில்லை ? எல்லாம் நான் சொன்னதிலேயே உள்ளது. போய் வா !

(சித்தர், மலையின் உச்சிக்குச் சென்றுவிட்டார். ஆனந்தன் வீடு திரும்பினான். மாமரத்தடியில் தங்கப் புதையல் உள்ளது என்றும், யானையின் தொண்டையில் வைரம் உள்ளது என்றும் சித்தர் சொன்னதாக மாமரத்தினிடமும் யானையிடமும் கூறினான்.)

**மாமரம் :** தம்பி! என் அடியிலுள்ள புதையலையும், யானையின் தொண்டையில் உள்ள வைரத்தையும் நீயே எடுத்துக்கொள். நீயும் பெருஞ்செல்வந்தனாகலாம்; நாங்களும் எங்கள் துன்பம் நீங்கி நலமாய் இருப்போம்.


**ஆனந்தன்:** உங்கள் சிக்கலுக்கு வழி சொல்லிவிட்டேன். என் வேலை முடிந்தது. நான் சென்று வருகிறேன்.

**யானை :** 'வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல்' பேசுகின்றாயே! உன்னை நாடி வந்துள்ள நல்ல வாய்ப்பை இழந்துவிடப் போகிறாயா ?

**ஆனந்தன்:** எனக்கு அதைப் பற்றிக் கவலை இல்லை.
(ஆனந்தன் சிங்கத்திடம் சென்றான்.)

**சிங்கம் :** தம்பி ! என் வயிற்றுவலி தீரச் சித்தரிடம் வழி கேட்டாயா ?

**ஆனந்தன்:** அதைக் கூறத்தான் வந்தேன். 'முழுச் சோம்பேறியான ஒரு மனிதனை முதன்முதலில் நீ பார்க்கும்போது உன் வயிற்றுவலி தானாகவே நீங்கும்' என்று சித்தர் கூறினார்



.

**சிங்கம் :** அடடே ! உன்னைப் பார்த்தவுடன் என் வயிற்றுவலி நீங்கிவிட்டதே ! தம்பி! நீ முழுச்சோம்பேறியா ?

**ஆனந்தன்:** உனக்கு உதவ எவ்வளவு பாடுபட்டேன்! என்னையே நீ இகழ்கிறாயே!

**சிங்கம் :** இகழவில்லை. நீ செல்வந்தனாக இப்பொழுதும் வழி உள்ளதே! மாமரத்தின் அடியில் தங்கம்...... யானையின் தொண்டையில் வைரம்...... இவற்றை எடுத்துக்கொண்டு செல்வந்தனாகலாமே. 'காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்'.

**ஆனந்தன்:** ஆ.....! சித்தர் சொன்னது எனக்கு இப்பொழுதுதான் புரிகிறது. உடனே சென்று யானை, மாமரம் ஆகியவற்றின் துயரம் தீர்த்து நானும் செல்வந்தனாவேன்.

(ஆனந்தன் விரைந்தான்.......)

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

### 1. அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.

சோம்பேறி ____________ சொப்பனம் ____________

மொட்டு ____________ புதையல் ____________

வைரம் ____________ இகழ்தல் ____________

### 2. பிரித்து எழுதுக.

விழுவதில்லை ____________

செல்வந்தனாவதற்கு ____________

நோயற்ற ____________

தங்கப்புதையல் ____________

பெருஞ்செல்வந்தன் ____________

### 3. எதிர்ச்சொல் எழுதுக.

சோம்பல் × ____________ கவலை × ____________

செல்வந்தன் × ____________ இளைத்து × ____________

துன்பம் × ____________ இகழ் × ____________

### 4. சொற்றொடரில் அமைக்க.

உண்பதும் உறங்குவதும் ____________

சீரும் சிறப்பும் ____________

### 5. விடையளிக்க.

1. உழைக்காமலே செல்வந்தன் ஆவேன் என்பதற்கு ஆனந்தன் கூறிய பழமொழி யாது ?
2. தெய்வம் யாருக்கு உதவும் என்று முல்லை கூறினாள் ?
3. சிங்கம் ஏன் வருந்தியது ?
4. யானையின் உடல் மெலிவுற்றதற்கு, அது கூறிய காரணம் யாது ?

## 6. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை தருக.

1. மாமரம் தன் குறையாக, ஆனந்தனிடம் கூறியது என்ன ?
2. சிங்கம், யானை, மாமரம் ஆகியவற்றின் குறைகளை நீக்கச் சித்தர் கூறிய வழி யாது ?

## 7. பழ மொழியை நிறைவு செய்க.

1. சொப்பனத்தில் கண்ட அரிசி ________________.
2. மந்திரத்தால் ________________ விழுவதில்லை.
3. நோயற்ற வாழ்வே ________________ செல்வம்.
4. யானைக்கும் ________________ சறுக்கும்.
5. காற்றுள்ள போதே ________________.

## 8. தகுந்த பழமொழிகளை இணைத்துத் தொடரை நிறைவு செய்க.

1. விழாக்களுக்குச் செல்லும்போது தகுதியான ஆடைகளை உடுத்திச் செல்ல வேண்டும். ஏனெனில், ________________
2. செல்வம் நிறைந்திருந்தாலும் நோயற்ற வாழ்வு வாழவேண்டும். ஏனெனில், ________________
3. படங்களை வரைந்து பழகவேண்டும். தமிழ் நூல்களைச் சரியான ஒலிப்புடன் படிக்கவேண்டும். ஏனெனில், ________________

சித்திரமும் கைப்பழக்கம்; செந்தமிழும் நாப்பழக்கம்.
ஆள் பாதி; ஆடை பாதி ; நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

## 9. பின்வரும் பழமொழிகளின் பொருளை எழுதுக.

1. மந்திரத்தால் மாங்காய் விழாது. ________________
2. யானைக்கும் அடி சறுக்கும். ________________
3. சிறுதுளி பெருவெள்ளம். ________________

### செயல் திட்டம்

பழமொழிகளைக் கேட்டறிந்து எழுதி 'பழமொழித் தொகுப்பு' உருவாக்கி ஒப்படை செய்க.

# 11. மரபு அறிவோம்

மாலை மணி ஐந்து. பாவை பள்ளியிலிருந்து வீட்டிற்கு இன்னும் வரவில்லை. பாவையின் அம்மா, கதவருகில் நின்றுகொண்டு தெருவையே பார்த்துக் கொண்டிருந்தாள். தெருவில் மக்கள் கூட்டங் கூட்டமாய்ப் போய்க்கொண்டும் வந்துகொண்டும் இருந்தார்கள்.



பாவையின் அம்மா தெருவில் இறங்கி நடக்கத் தொடங்கினாள். சாலை ஓரத்தில் சரளைக் கற்களை ஆங்காங்கே குவியல் குவியலாகக் கொட்டி வைத்திருந்தனர். வழியில், காய்ந்த சுள்ளிக் கற்றைகளைத் தலையில் சுமந்துகொண்டு சிலர் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். ஒருவர் ஆடுகளை மந்தை மந்தையாக ஓட்டிச் சென்றார். ஆடுகள் 'மே! மே!' என்று கத்திக் கொண்டே சென்றன.

தோழிகள் இருவருடன் பாவை வீடு திரும்பிக் கொண்டிருந்தாள். பாவை தெருவில் வருவதை அம்மா பார்த்தாள்; ஓடிச்சென்று அணைத்துக்கொண்டாள். "ஏம்மா இவ்வளவு நேரம்? பள்ளி விட்டு வெகு நேரமாயிற்றே. நான் எவ்வளவு கவலைப்பட்டேன் தெரியுமா?" என்றாள் பாவையின் அம்மா.

"எங்கள் ஆசிரியர், 'கற்றலுக்கான ஒரு செயல்' கொடுத்திருந்தார். படங்கள் வரையப்பட்ட சில அட்டைகளை எங்களிடம் கொடுத்தார். அட்டை ஒவ்வொன்றிலும் பூ, மாமரம், தென்னைமரம், பனைமரம், கொய்யாமரம், வாழைமரம், நெற்பயிர், சோளப்பயிர், கம்புப்பயிர் ஒவ்வொன்றாக வரையப்பட்டிருந்தது.

வரையப்பட்டுள்ள பொருள்களின் தொகுப்புப் பெயர்களைக் கணினி வழியே கண்டுபிடித்து எழுதி வரவேண்டும் என்றும், பனை, கொய்யா, வாழை, நெல் ஆகியவை நிறைந்திருக்கும் இடத்தின் தொகுப்புப் பெயர்களையும் எழுதிவரவேண்டும் என்றும் ஆசிரியர் சொன்னார்.



நம் வீட்டில் ஏதம்மா கணினி? அதனால், அடுத்த தெரு அஞ்சலை வீட்டுக்குப் போனேன். அவளோ, வீட்டின் பின்புறம் திராட்சைத் தோட்டத்தில் இருந்தாள். அங்கே, திராட்சை 'குலைகுலையாய்'காய்த்துத் தொங்கின.

ஒரு பெரிய வைக்கோல்போர் இருந்தது. அஞ்சலையின் அண்ணன் அதன் பக்கத்தில் உட்கார்ந்து மடிக்கணினியில் ஏதோ தட்டச்சு செய்துகொண்டிருந்தார். அவரிடம், நாங்கள் கொண்டுவந்த அட்டைகளைக் கொடுத்து, 'இவற்றின் தொகுதிப் பெயர்களை இணைய தளத்தில் தொடர்புகொண்டு கண்டுபிடித்துக் கொடுங்கள்' என்று கேட்டோம்.அவர் ஒரே நொடியில் பதிலை வரவழைத்துக் கொடுத்தார். நாங்கள் அவற்றைக் கவனமாகக் குறித்துக் கொண்டோம்.

பூந்தோட்டம், மாந்தோப்பு, தென்னந்தோப்பு, பனந்தோப்பு, கொய்யாத்தோப்பு, வாழைத்தோட்டம், நெல்வயல், சோளக்கொல்லை, கம்பங்கொல்லை ஆகிய தொகுப்புப் பெயர்களை அறிந்தோம். அதனால்தான், காலதாமதம் ஆகிவிட்டதம்மா!'' என்று பாவை மென்மையாகக் கூறினாள்.

இதைக் கேட்ட பாவையின் அம்மா, "இதைச் சிற்றூர்வாழ் மக்களே எளிதாகச் சொல்லிவிடுவார்களே! வேலமரம் நிறைந்த இடத்திற்கு 'வேலங்காடு', வெற்றிலை விளையும் இடத்திற்கு 'வெற்றிலைத்தோட்டம்', பசுக்களின் கூட்டத்தைப் 'பசுநிரை' என்பார்களே'' என்றாள் அம்மா .பாவை, அப்படியா! என்று வியந்தாள். அப்பொழுது, 'கீரை.....வாங்கலையோ கீரை.....'என்ற கீரைக்காரியின் குரல் கேட்டது.



"கீரைக்கற்றை என்ன விலை?''என்றாள் பாவையின் அம்மா. "மூன்று ரூபாய்'' என்றாள் கீரைக்காரி. "ஐயோ......! அவ்வளவு விலையா?''என்ற அம்மா, இரண்டரை ரூபாய், இரண்டு ரூபாய், ஒன்றரை ரூபாய் எனப் படிப்படியாகப் பேரம் பேசி, இறுதியில் ஒரு கற்றை ஒன்றரை ரூபாய் என இரண்டு கீரைக் கற்றைகளை வாங்கினாள்.

கீரைக்காரி, "அம்மா! களைப்பாக இருக்கிறது. ஒரு குவளை மோர் இருந்தால் கொடுங்கள்''என்றாள். அவளின் சோர்வைப் பார்த்து இரக்கப்பட்ட அம்மா, அவளுக்குச் சுவையான உணவளித்தாள். கீரைக்காரி வாழ்த்திவிட்டுச் சென்றாள்.

‘கீரை வாங்க இவ்வளவு பேரம் பேசிய அம்மா, கீரைக்காரிக்கு வயிறார உணவு அளித்தது ஏன் ?’ பாவைக்குப் புரியவில்லை. தன் மகளின் எண்ணத்தைப் புரிந்துகொண்ட அம்மா, “வணிகத்தில் விலைப் பேசிப் பொருளுக்குத் தக்க விலைதான் கொடுக்கவேண்டும்; உழைப்புக்கு ஏற்ற ஊதியம் தரவேண்டும். ஆனால், உழைப்பவரின் பசித் துன்பத்தை உடனே போக்கவேண்டும்! இதுவே மக்களின் மாண்பாக இருக்கவேண்டும்” என்றாள்.

மக்களின் மாண்பையும், பல்வேறு பொருள்களின் தொகுப்புப் பெயர் மரபையும் அறிந்த பாவை பெரிதும் மகிழ்ந்தாள். அவளுடைய தோழிகளும், “இன்று நாம் ஏராளமான செய்திகளை அறிந்து கொண்டோம்” என்று சொல்லிய வண்ணம் மகிழ்ச்சியோடு தத்தம் வீடு திரும்பினர்.

### பாவையின் ஒப்படைப்புகள்



வாழைத்தோட்டம்



நெல்வயல்



பனந்தோப்பு



சோளக்கொல்லை



கொய்யாத்தோப்பு



கம்பங்கொல்லை

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

### 1. அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.

சுள்ளி ______________ ஊதியம் ________________ மாண்பு ______________

### 2. பிரித்து எழுதுக.

வெற்றிலை ______________ தத்தம் ________________

பூந்தோட்டம் ______________ வாழைத்தோட்டம் ________________

உணவளித்தார் ______________ பசித்துன்பம் ________________

### 3. சரியா (✓) தவறா (×) குறியிடுக.

1. பாவை பள்ளியிலிருந்து வீடு திரும்பாததை அறிந்த அவள் அம்மா மகிழ்ச்சி அடைந்தாள். ☐
2. திராட்சை கொத்துக் கொத்தாய்க் காய்த்துத் தொங்கிக் கொண்டிருந்தது. ☐
3. வேலமரம் நிறைந்த இடத்திற்கு வேலங்காடு என்று பெயர். ☐
4. கீரைக்காரியின் களைப்பை அறிந்த பாவையின் அம்மா 'உணவு விடுதிக்குச் செல்' என்று கூறினாள். ☐
5. பாவையின் தோழிகள் ஒன்றும் கற்றுக்கொள்ளவில்லையே என்று வருந்தினர். ☐

### 4. விடையளிக்க.

1. ஆசிரியர் மாணவர்களுக்குக் கொடுத்த கற்றலுக்கான செயல் யாது?
2. அஞ்சலையின் அண்ணனிடம் பாவை எதைக் கண்டுபிடித்துக் கொடுங்கள் என்று கேட்டாள்?
3. பசுக் கூட்டத்தை எவ்வாறு அழைப்பர்?

### 5. ஆறுவரிகளுக்கு மிகாமல் விடை தருக.

1. பாவை அறிந்துகொண்ட தொகுப்புப் பெயர்களை எழுதுக.
2. பாவையின் அம்மா எவ்வாறு கீரைக் கற்றையை வாங்கினாள்?
3. கீரைக்காரிக்கு உணவளித்தது ஏன்?

### 6. எதிர்ச்சொல்லைப் பயன்படுத்தித் தொடரை நிறைவு செய்க.

1. வாழைத்தோட்டம் அருகே உள்ளது. தென்னந்தோப்பு ____________ உள்ளது.
2. யானைகள் நீர்நிலைகளில் இறங்கி நீரைக் குடிக்கும்; குரங்குகள் மரத்தின் மேல் ______________________ விளையாடும்.
3. பேருந்தில் பின்புறம் ஏறி ______________________ இறங்க வேண்டும்.

7. தொகுப்புப் பெயர் அறிந்து தொடரை நிறைவு செய்க.

(எ.டு) யானை ______________________________ நுழைந்தது. (கரும்பு)

யானை கரும்புத் தோட்டத்தில் நுழைந்தது.

1. கூட்டமாகப் பறந்த குருவிகள் ____________ அமர்ந்தன. (சோளம்)

______________________________________________

2. எலிகள் ____________ புகுந்து அழிவு ஏற்படுத்துகின்றன. (நெல்)

______________________________________________

3. திடீரென்று வீசிய சூறைக்காற்றால் __________ அழிந்தது. (வாழை)

______________________________________________

4. தீயை__________ அருகே கொண்டு செல்லக்கூடாது. (வைக்கோல்)

______________________________________________

5. மல்லிகை, முல்லை, செவ்வந்தி மலர்ந்து மணம் வீசின. (பூ) ____________

______________________________________________

8. அடைப்பில் உள்ள அடுக்குத் தொடரைப் பயன்படுத்தித் தொடரை நிறைவு செய்க.

1. வாழைத்தாரில் பழங்கள் ____________ ____________ இருக்கும்.
2. அவரை ____________ ____________ காய்க்கும்.
3. எறும்புகள் ____________ ____________ செல்லும்.
4. நெல் ____________ ____________அடுக்கப்பட்டுள்ளது.
5. கற்கள் ____________ ____________ கொட்டிக் கிடக்கின்றன.

மூட்டை மூட்டையாய், கொத்துக் கொத்தாய், சீப்புச் சீப்பாய், குவியல் குவியலாய், சாரை சாரையாய்

9. பொருளறிந்து தொடரை நிறைவு செய்க.

1. நெற்பயிரின் நெல்மணிகள் மனிதர்களுக்கும், பயிரின் ____________ மாடுகளுக்கும் உணவாகப் பயன்படும். (தாழ்கள் / தாள்கள்)
2. பறவைகள் இரை தேடிப் பல இடங்களுக்குப் ____________ செல்கின்றன. (பறந்து / பரந்து)
3. எலிகள் மண்ணைத் தோண்டி ____________ அமைக்கின்றன. (வலைகள் / வளைகள்)
4. கதிர் அறுக்கும் கருவி ____________ . (அறிவாள் / அரிவாள்)

### செயல் திட்டம்

விலங்குகளின் ஒலிக்கு ஏற்ற வினைச் சொற்களை எழுதி வருக.

(எ.டு.) சிங்கம் – முழங்கும்.

# 12. வருது. . . வருது. . . ரோபோ வருது. . . !




விருதுநகர்,
09.08.2011

அன்புத்தோழி இலக்கியா,

நலம். நலமறிய ஆவல். நீ எழுதிய மடல் கிடைத்தது. தற்கால அறிவியல் கண்டுபிடிப்புகளில் கணினியே முதன்மையானது என்று எழுதியிருந்தாய். ஆம்! குறைந்த நேரத்தில் அதிகப்பணிகளை எளிதாகக் கணினி செய்து முடிக்கும். இனிவரும் காலங்களில் கணினியின் துணையின்றி எச்செயலும் நடைபெறாது என்பதை நீ சிந்தித்திருப்பாய்!

'இயந்திர மனிதன்' என்று சொல்லக் கூடிய 'ரோபோ' வைப் பற்றி விளக்கமாக எழுதவேண்டும் என்று கேட்டிருந்தாய். உன் அறிவியல் ஆர்வத்தை எண்ணி எண்ணி மகிழ்கின்றேன்! பாராட்டுகின்றேன்!

கோடை விடுமுறையில் என் பெற்றோருடன் ஜப்பான் நாட்டிற்குச் சென்றிருந்தேன் அல்லவா? அங்கே, தலைநகர் டோக்கியோவில் நடைபெற்ற அறிவியல் கண்காட்சிக்கு நாங்கள் சென்றிருந்தோம். தகவல்தொடர்பு, போக்குவரத்து, மருத்துவம், வேளாண்மை முதலிய பல துறைகளில் அந்நாடு அடைந்த முன்னேற்றங்களை விளக்கும் அரங்குகள் அங்கே இருந்தன. அவற்றைப் பார்த்து வியந்தோம்!


பின்னர் ரோபோக்கள் இடம் பெற்ற அரங்கிற்குச் சென்றோம். அங்கும் இங்குமாகப் பல ரோபோக்கள் கைகளையும் கால்களையும் அசைத்து நடந்து திரிந்தன. அவற்றுள் ஒன்று எங்கள் அருகே வந்து கைகளைக் குவித்து வணங்கி, 'வருக! வருக! வணக்கம்!' எனக் கூறி வரவேற்றது.

துணி துவைத்தல், வீட்டைத் தூய்மை செய்தல், விருந்தினரை வரவேற்றல், நோயாளிகளுக்கு மருத்துவ உதவி செய்தல் முதலிய பணிகளை ரோபோக்கள் செய்யும் என்று அரங்கின் மேலாளர் எங்களிடம் விளக்கினார்.


நாங்கள் தமிழில் பேசிக் கொள்வதைக் கேட்டு ஒருவர் எங்கள் அருகில் வந்தார். 'வணக்கம்' என்று கூறினார். நாங்களும் பதிலுக்கு 'வணக்கம்' கூறினோம். அவர் கணினி அரங்கின் பொறுப்பாளர் என்றும் தமிழை நன்கு அறிந்த ஜப்பானியர் என்றும் அறிந்து வியந்தோம். நாங்கள் அவரிடம் 'ரோபோ' செயல்படும் முறைபற்றிக் கேட்டோம்.

அவர், "ரோபோக்களைப் பல்வேறு வடிவங்களில் தேவைக்கேற்ப உருவாக்கியுள்ளோம். அவை கணினியின் உதவியுடன் செயல்படுகின்றன. அவற்றின் 'மூளை' எது தெரியுமா? 'சிலக்கான் சில்லுதான்'. ரோபோக்கள் எப்படி இயங்க வேண்டும், என்னென்ன பணிகளைச் செய்யவேண்டும் என்னும் தகவல்கள் சிலக்கான் சில்லுகளில் பதிவு செய்யப்பட்டிருக்கும். 'ரோபோ' இயங்குவதற்கான 'வழிகாட்டும் செயல்முறைகளை' எழுதப் பயன்படும் கணினி மொழிக்கு 'ரோபோலான்' என்று பெயர்.

'ஒளிப்படக்கருவி'தான் ரோபோவின் கண்.. நுண்ணிய 'ஒலி வாங்கி'களே அதன் காதுகள். 'ஒலி பெருக்கி' ரோபோவின் வாய் ஆகும். 'மின்சாரம்'தான் ரோபோவின் உணவு. ஆம்! ரோபோக்கள் மின்னாற்றலால்தான் இயங்குகின்றன" என்று கூறினார்.



"ஐயா, ரோபோக்கள் வீட்டு வேலைகளைத்தான் செய்யுமா?" என்று அவரிடம் கேட்டோம். அதற்கு அவர், "ரோபோக்கள் ஆழ்கடல் மூழ்கி ஆய்வு செய்யும். காற்றே இல்லாத விண்வெளியில் மிதந்து ஆய்வு நடத்தும். இடர் மிகுந்த சுரங்கங்களுக்குள் இறங்கி அரிய பணிகளை ஆற்றும். மருத்துவமனைகளில் இரவுபகல் பாராமல் உதவும். வாகனத் தொழிற்சாலைகளில் உதிரிப் பகுதிகளைப் பற்றவைத்துப் பொருத்தும். எதிர்பாராத இன்னல்கள் ஏற்படுத்தும் அணுஉலைகளிலும் பணிபுரியும் . ஏன்? மனிதர்களால் நேரிடையாகச் செய்ய இயலாத பல கடினமான செயல்களை எளிதாகவும் சரியாகவும் செய்யும்" என்று கூறினார்.



நீ, தொலைக்காட்சியில் ரோபோக்களின் விளையாட்டையும் அவை செய்யும் பணிகளையும் பார்த்து மகிழ்ந்திருப்பாய். நம் நாட்டில் ரோபோக்களின் பயன்பாடு தற்போது பெருமளவில் இல்லை. எனினும், எதிர்வரும் காலத்தில் ரோபோக்களின் பயன்பாடு பெருகும் என்பதில் ஐயமில்லை.

மற்றவை உன் மடல் கண்டு எழுதுகின்றேன்.

அன்புத் தோழி,
கி. அமுதா.

முகவரி

செல்வி. க. இலக்கியா,
56, பெரியார் வீதி,
சித்தார்,
ஈரோடு மாவட்டம்-638 311.

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

### 1. அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.

வேளாண்மை ______________ சுரங்கம் ______________
விண்வெளி ______________ இடர் ______________

### 2. பிரித்து எழுதுக.

தேவைக்கேற்ப ______________
மின்னாற்றல் ______________
நலமறிய ______________
அந்நாடு ______________
தொழிற்சாலை ______________

3. தொடர்களை வரிசைப்படுத்தி எழுதுக.

1. அறிவியல் அரங்குகளைப் பார்த்தோம்.
2. ரோபோ செயல்படும் முறை பற்றிக் கேட்டோம்.
3. கோடை விடுமுறையில் ஜப்பான் நாட்டிற்குச் சென்றிருந்தோம்.
4. ரோபோ ஒன்று 'வருக வருக வணக்கம்' என்று வரவேற்றது.

4. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. ரோபோ என்பதன் தமிழ்ப்பெயர் ________________
2. ஜப்பானின் தலைநகரம் ________________
3. அறிவியல் கண்டுபிடிப்புகளுள் ____________ முதன்மையானது.
4. ரோபோ இயங்கப் பயன்படும் கணினி மொழி ____________ ஆகும்.

5. விடையளிக்க.

1. ரோபோக்கள் செய்யும் வீட்டு வேலைகள் யாவை ?
2. ஜப்பானில் நடந்த அறிவியல் கண்காட்சியில் இடம் பெற்றிருந்த அரங்குகள் யாவை ?
3. ரோபோக்களின் மூளையாகச் செயல்படுவது எது ?
4. ரோபோக்களின் கண், காது, வாயாக இயங்கும் பகுதிகள் யாவை ?
5. ரோபோக்கள் செய்யும் பணிகள் யாவை ?

6. பொருத்தமான எதிர்ச்சொல்லை எழுதித் தொடரை நிறைவு செய்க.

1. அறிவியல் கண்காட்சியைப் பார்ப்பது நமக்கு________தரும். (வருத்தம்)
2. பாடங்களைத் படித்தால் அறிவு____________ (தேயும்)
3. வேளாண்மையில் ________ முறைகளைப் புகுத்த வேண்டும். (செயற்கை)
4. தங்கத்தின் விலை ____________ கொண்டிருக்கிறது. (இறங்கிக்)
5. மனிதர் செய்யும் வேலைகளை இயந்திரங்கள் ______ ஆக்கிவிட்டது. (அரிது)

7. அமுதா எழுதிய மடலுக்குப் பதில் மடல் எழுதுக.

**செயல் திட்டம்**

அறிவியல் கருவிகளின் படங்களைச் சேகரித்துப் படத்தொகுப்பு அமைக்க.

## விளையாடலாம் வாங்க !

ஒவ்வொருவரும் ஒரு துண்டுத் தாளினை எடுத்துக் கொள்க. அதில் உங்களுக்குப் பிடித்த ஏதேனும் ஒரு விலங்குபற்றி நான்கு சொற்றொடர் எழுதுக. எழுதிய தாள்களைச் ஒருவரிடமிருந்து மற்றவர் மாற்றிக் கொள்க. ஒவ்வொருவரும் தன்னிடம் உள்ள தாளில் எழுதப்பட்ட செய்தியைப் படிக்க.

# 13. இறகும் இலையும் ஒன்றடி

கொங்குநாட்டு மன்னர், மக்களின் நிலைமையை அறிய மாறுவேடத்தில் புறப்பட்டார். செல்லும் வழியில் கடுமையான வெயில். அதனால், அரசருக்குக் களைப்பும் நீர்வேட்கையும் ஏற்பட்டது. வேட்கையைத் தணிக்க அருகிலிருந்த குளத்தை அடைந்தார். நீர்வேட்கையைத் தணித்துக் கொண்டார்.

குளத்தின் அருகே ஓர் ஆலமரம் இருந்தது. அரசர் தம் களைப்பைப் போக்க அந்த ஆலமரத்தின் நிழலில் தங்கினார். அப்போது அவ்வழியே மூன்று பெண்கள் வந்தனர். அவர்களும் தம் களைப்பைப் போக்க அந்த ஆலமரத்தின் நிழலில் உட்கார்ந்து இளைப்பாறினர்.



அம்மூவரில் ஒருத்தி, ஆலமரத்தைப் பார்த்தவாறே, "காலும் கழியும் ஒன்றடி" என்றாள். இரண்டாமவள், "இறகும் இலையும் ஒன்றடி" என்றாள். மூன்றாமவள், "வாயும் கனியும் ஒன்றடி" என்றாள். பின்னர் மூவரும் பேசிக்கொண்டே தத்தம் வீட்டை நோக்கிப் புறப்பட்டனர்.

மூன்று பெண்களும் பேசியவற்றை அரசர் கேட்டுக் கொண்டிருந்தார். அவற்றின் பொருளை மீண்டும் மீண்டும் நினைத்துப் பார்த்தார். ஆனால், அவற்றின் பொருள் விளங்கவில்லை.

மன்னர் அரண்மனையை அடைந்தார். அமைச்சரை அழைத்தார். வழியில் நடந்தவற்றை அமைச்சரிடம் கூறினார்

“அந்த மூன்று பெண்களும் பேசிக் கொண்டதன் பொருள் என்ன ?” என்று கேட்டார். அதைக் கேட்ட அமைச்சர், அரசரைப் பார்த்து, “மன்னர் மன்னா ! நீங்கள் இளைப்பாறிய அந்த ஆலமரத்தில் கிளி ஒன்று இருந்ததைப் பார்த்தீர்களா ?” என்று கேட்டார். அரசரும் “ஆம் ! கிளி ஒன்று அந்த மரத்தின்மேல் அமர்ந்திருந்தது. அது 'கீச் கீச்' என்று கத்தியது” என்று கூறினார். அமைச்சர் சிந்தித்து, “அந்தப் பெண்கள் கிளியையும் ஆலமரத்தையும் ஒப்பிட்டுத்தான் இப்படிக் கூறியிருக்க வேண்டும்” என்றார்.

“எப்படி ?” என்று அரசர் வினவினார். அமைச்சர் அந்தப் பெண்கள் மூவரும் கூறிய புதிர்களுக்கு விளக்கம் அளித்தார்.

முதல்பெண், கிளியின் காலையும் ஆலமரத்தின் கிளையையும் ஒப்பிட்டு, “காலும் கழியும் ஒன்றடி” என்று கூறியிருக்க வேண்டும்.

இரண்டாமவள், கிளியின் இறகையும் ஆலமரத்தின் இலையையும் ஒப்பிட்டு, “இறகும் இலையும் ஒன்றடி” என்று கூறியிருக்க வேண்டும்.

மூன்றாமவள், கிளியின் அலகும் ஆலமரத்தின் பழமும் சிவந்திருப்பதையே “வாயும் கனியும் ஒன்றடி” என்று கூறியிருக்கக் கூடும் என்று கூறி முடித்தார்.

அமைச்சரின் விளக்கத்தைக் கேட்ட அரசர், புதிராகப் பேசிய தம் குடிமக்களின் அறிவுக் கூர்மையை எண்ணி மகிழ்ந்தார்.

## படிப்போம் ! சிந்திப்போம் ! எழுதுவோம் !

### 1. கோடிட்ட இடத்தை நிறைவு செய்க.

1. மன்னர் மக்களின் நிலை அறிய ____________ சென்றார்.
2. குளத்தின் அருகே ஓர் ____________ இருந்தது.
3. மூவரில் ஒருத்தி, காலும் ____________ ஒன்றடி என்றாள்.
4. மூன்றாமவள், வாயும் ____________ ஒன்றடி என்றாள்.
5. அந்தப் பெண்கள் ____________ ஆலமரத்தையும் ஒப்பிட்டுத்தான் கூறியிருக்கவேண்டும்.

### 2. விடையளிக்க.

1. அரசர் ஏன் குளத்தை அடைந்தார் ?
2. ஆலமரத்தின் நிழலில் யார் யார் தங்கினர் ?
3. இறகும், இலையும் ஒன்றடி – விளக்குக.
4. அரசரைப் பார்த்து அமைச்சர் என்ன வினவினார் ?
5. மன்னர் மகிழ்ச்சி அடையக் காரணம் என்ன ?

3. புதிர்களுக்கான விடையைப் பெட்டியிலிருந்து கண்டுபிடித்து எழுதுக.

1. ஒற்றைக் காலில் சுற்றுவான் ஓய்ந்து போனால் படுத்திடுவான்.
அவன் யார் ? ______________________

2. சுட்டெரிக்கும் விளக்கு; அணைக்க முடியாத விளக்கு; அந்தி வந்தால் தானே அணையும் விளக்கு.அது எது ? ________________

3. சின்னத் தம்பி; சிவப்புத் தம்பி; திறந்த வாய் மூடாத நல்லதம்பி.
அவன் யார் ? ___________________________

4. பாட்டுப் பாடவா! பாய்ந்து கடிக்கவா! ஓடிப்போகவா! உயரப் பறக்கவா!.
நான் யார் ? ____________________________

5. தாளைக் கொடுத்தால் தின்பான்; தண்ணீர் கொடுத்தால் மடிவான்.
அவன் யார் ? ___________________________

| |
|---|
| அஞ்சல் பெட்டி, கதிரவன், நெருப்பு, பம்பரம், கொசு. |

4. யார் அவர் ?

1. வெளிநாட்டில் பிறந்த பெண்மணி;
கொல்கத்தாவில் குடியேறியவர்;
அனாதைகளுக்கு இல்லம் அமைத்தவர்;
நோபல் பரிசு பெற்றவர். – அவர் யார் ?

2. ஈரோட்டில் பிறந்தவர்;
நகராட்சித் தலைவராய் இருந்தவர்;
தமிழர் வாழ்வை மாற்றியமைத்தவர்;
'பகுத்தறிவுப் பகலவன்.' – அவர் யார் ?

5. மாணவர்கள் வட்டமாக அமர்ந்து கொள்க. ஒவ்வொருவரும் ஒரு தொடரைக் கூறி கதை உருவாக்குக.

6. பெயர்ச்சொல்லின் இறுதியில் 'கள்' – சேர்த்துப் பன்மையாக்குக.

(எ.கா.)

தூக்கணங்குருவி கூடு கட்டும். தூக்கணங்குருவிகள் கூட்டம் கூட்டமாய் வாழும்.

1. காட்டு விலங்குகளில் உருவத்தில் பெரிய விலங்கு யானை. காட்டில் வாழும் __________ சில சமயம் நாட்டிற்குள் புகுந்து அழிவை ஏற்படுத்தும்.

2. தனி மரம் தோப்பாகாது. காட்டில் பலவகை ______________ காணப்படும்.

3. இனிப்புக் கடையில் பல்வேறு ________________________ விற்கப்படும்.

## 7. ஒப்பிடுக.

பாடத்தில் கிளியின் கால், இறகு, அலகு ஆகியவை ஆலமரத்தின் கிளை, இலை, பழம் ஆகியவற்றுடன் ஒப்பிடப்படுகின்றன. இதுபோலப் பின்வரும் படங்களைப் பார்த்துப் பொருத்தமானவற்றை ஒப்பிட்டுக் கூறுக.

(எ.டு.)




இறகும் இதழும் ஒன்றே.




____________________




____________________




____________________

## 8. படத்தைப் பார்த்துப் புதிர் அமைக்க.

(எ.கா.)

மூன்று கண் இருக்கும்
உச்சியில் குடுமி இருக்கும்
உடைத்தால் அழுவேன். –நான் யார் ?





____________________
____________________
____________________



________________________

________________________

________________________

**செயல் திட்டம்**

உன் வீட்டில் உள்ள பெரியவர்களிடம் ஐந்து புதிர்களைக் கேட்டு எழுதுக.

### விளையாடலாம் வாங்க !

இரு குழுவாகப் பிரிந்து கொள்க. ஒரு குழு ஒரு விடுகதை சொல்க. அதற்கான விடையை மற்றொரு குழு சொல்க. சரியான விடையைச் சொன்ன குழுவிற்கு மதிப்பெண் இடுக. குழுமாற்றிச் செயலைத் தொடர்க. அதிக மதிப்பெண் பெற்ற குழு வெற்றி பெற்றதாக அறிவித்துப் பாராட்டுக.

## தெரிந்துகொள்வோம்

### காலங்கள்

தமிழில் உள்ள சொற்களை நான்கு வகையாகப் பாகுபடுத்துவர். அவை:

பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்.

இதில் வினைச்சொல் காலத்தைக் காட்டும். காலம் மூவகைப்படும். அவை :

1. இறந்தகாலம் 2. நிகழ்காலம் 3. எதிர்காலம்.

(எ.டு.)

1. இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார். (இறந்தகாலம்)
2. சமச்சீர்க் கல்வித்திட்டம் தமிழ்நாட்டில் சிறப்பாகச் செயல்படுகிறது. (நிகழ்காலம்)
3. சீரான கால இடைவெளியில் 'தமிழ்ச் செம்மொழி மாநாடு' இனிவரும் காலங்களில் நடத்தப்படும். (எதிர் காலம்)

**பின்வரும் வினைச் சொற்களைக் காலத்திற்கு ஏற்ப அட்டவணைப்படுத்துக.**

எழுந்தான், படிக்கிறாள், வருவார், ஓடினான், பாடுவேன்,
விழிக்கிறான், தேடுவார், நடிக்கின்றான், கற்றாள்.

| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

## 14. நீண்டவழி போக வேண்டும் அம்மா!



கல்லும் மலையும் குதித்துவந்தேன் – பெருங்
காடும் செடியும் கடந்துவந்தேன்;
எல்லை விரிந்த சமவெளி – எங்கும்நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன்.

ஏறாத மேடுகள் ஏறிவந்தேன் – பல
ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன்;
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் – மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்.

ஆயிரம் காலால் நடந்துவந்தேன் – நன்செய்
அத்தனையும் சுற்றிப் பார்த்துவந்தேன்;
நேயமுறு புன்செய்க் காட்டிலும் – அங்கங்கு
நீரை இறைத்து நெடுகவந்தேன்.

பஞ்சை அரைத்துநூல் நூற்றுவந்தேன் – சீனி
பாகமாய்ச் செய்து கொடுத்துவந்தேன்;
நெஞ்சம் உலர்ந்த நெடுநகரில் – குழாய்
நீராகவும் சென்று பாய்ந்துவந்தேன்.

அல்லும் பகலும் அலைந்துவந்தேன் – எங்கள்
ஆழி இறைவனைக் காணவந்தேன்;
நில்லும் எனக்கினி நேரமில்லை – இன்னும்
நீண்ட வழிபோக வேண்டும்அம்மா!

–கவிமணி சி. தேசிக விநாயகம் பிள்ளை

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | தேசிக விநாயகம் பிள்ளை. |
| சிறப்புப் பெயர் | : | கவிமணி. |
| பெற்றோர் | : | சிவதாணுப்பிள்ளை-ஆதிலட்சுமி. |
| பிறந்த ஊர் | : | தேரூர் – கன்னியாகுமரி மாவட்டம். |
| காலம் | : | 27.08.1876 – 26.09.1954. |
| இயற்றிய நூல்கள் | : | மருமக்கள் வழி மான்மியம், ஆசிய ஜோதி, உரைமணிகள், மலரும் மாலையும். |



## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

### 1. அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.

சமவெளி ____________ ஓடை ____________
நன்செய் ____________ புன்செய் ____________
அல் ____________ ஆழி ____________

### 2. பிரித்து எழுதுக.

எனக்கினி ____________
நேரமில்லை ____________
நன்செய் ____________
புன்செய் ____________
அங்கங்கு ____________

### 3. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. கல்லும் ____________ குதித்து வந்தேன்.
2. ஏரி ____________ நிரப்பி வந்தேன்.
3. புன்செய்க் காட்டிலும் ____________ இறைத்து வந்தேன்.
4. அல்லும் ____________ அலைந்து வந்தேன்.
5. இன்னும் நீண்ட ____________ போகவேண்டும்.

### 4. விடையளிக்க.

1. ஆறு எங்கெங்கே குதித்து வந்தது ?
2. சமவெளியில் ஆறு எவ்வாறு சென்றது ?
3. ஆறு எவற்றைக் கொடுத்து வந்தது ?
4. நெடுநகரில் ஆறு எதன் வழியாகப் பாய்ந்து வந்தது ?

### 5. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை தருக.

தான் சென்று வந்த இடங்களாக ஆறு கூறும் இடங்களைத் தொகுத்து எழுதுக.

6. அடிக்கோடிட்ட சொல்லின் எதிர்ச்சொல்லால் நிரப்புக.

1. மாடியில் ஏறினேன். பின்பு கீழே ________________.
2. மேடான இடத்தில் வீடு கட்ட வேண்டும். ________________ இடத்தில் வீடு கட்டக் கூடாது.
3. நன்செய்யும் ________________ நாட்டுக்கு அழகு என்பர்.
4. இரவு ________________ பாராது உழைத்தால் முன்னேறலாம்.
5. மாணவர்களில் பலர் விளையாடச் சென்றனர். ________________ விளையாடச் செல்லவில்லை.

7. மயங்கொலிப் பிழை திருத்தி எழுதுக.

1. ஆரு சமவெளிகளில் பாய்ந்து ஏறி குலங்கள் நிறப்பி வந்தது.
2. தாணங்களில் சிரந்தது இறத்த தாணம்.
3. மறங்களை வலர்த்தால் அம்மறங்கள் மக்கலை வழர்க்கும்.
4. இன்றைய குலந்தைகளே நாழைய சாண்றோர்கள்.
5. காவிறி ஆரு நீர்வலம் மிக்க ஆரு.

8. ஆறுகள், கோவில்கள் ஆகிய இடங்களுக்கு மக்கள் சுற்றுலாச் செல்கின்றனர். இதனால் சூழல் கெடுகிறது. இதை எவ்வாறு தவிர்க்கலாம் என எழுதுக.

________________
________________
________________
________________
________________

9. குழுவில் பொருந்தாத பெயர்களைத் தனியே எடுத்து எழுதுக.


1. கல், மலை, காடு, பாறை. ________________
2. தங்கம், வெள்ளி, வைரம், இரும்பு. ________________
3. ஏரி, கடல், குளம், கண்மாய். ________________
4. மலை, காற்று, மண், மரம். ________________
5. வீடு, கூடு, பொந்து, குகை. ________________

### செயல் திட்டம்


ஆறு செல்லும் வழிகளைப் படமாக வரைந்து வண்ணந் தீட்டுக.

# 15. படித்தால் தெரியும்


கல்விச் சுற்றுலாவாகச் செஞ்சிக் கோட்டைக்குச் சென்றோம். இக்கோட்டை விழுப்புரம் மாவட்டத்தில் உள்ளது.தமிழ்நாட்டில் இன்றளவும் சிதைந்து போகாமல் உள்ள கோட்டை 'செஞ்சிக் கோட்டை'ஆகும்.செஞ்சியை ஆண்ட மன்னர்களில் 'தேசிங்கு ராசன்' தான் புகழ்பெற்ற மன்னன் ஆவான்.ஆங்கிலேயரை எதிர்த்து இளமையிலேயே வீரமரணம் அடைந்தவன்.



கோட்டையின் பல பகுதிகளை நாங்கள் சுற்றிப் பார்த்தோம். கோட்டையின் முன் 'இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறை'யால் வைக்கப்பட்டுள்ள அறிவிப்புப் பலகையைப் படித்தோம்.



எங்கள் ஆசிரியரிடம் தொல்பொருள் துறையால் வைக்கப்பட்ட அறிவிப்பைப் பற்றிப் பல செய்திகளைக் கேட்டறிந்தோம். அவர் சென்னையில் உள்ள செயின்ட் ஜார்ஜ்கோட்டை, தஞ்சைப் பெரிய கோயில் போன்ற தொன்மை வாய்ந்த பல இடங்கள் தொல்பொருள் துறையால் பாதுகாக்கப்படுகின்றன என்று விளக்கினார்.




செஞ்சிக் கோட்டையைப் பார்த்து முடித்தவுடன் சீர்மிகு சென்னைக்கு வந்தோம். மெரினா கடற்கரை,அருங்காட்சியகம் ஆகிய இடங்களைச் சுற்றிப் பார்த்தோம். வழியில் ‘விவித பாரதி’யின் வர்த்தக ஒலிபரப்பு விளம்பரத்தைப் படித்துப் பார்த்தோம்.



சென்னை பொது மருத்துவமனை வழியாக எங்கள் பேருந்து மெதுவாகச் சென்றது. மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்த அறிவிப்பை மாணவன் ஒருவன் உரக்கப் படித்தான். 'பார்வையாளர் என்பவர் யார்', என்று ஆசிரியரிடம் கேட்டோம். அவர், மருத்துவமனையில் உள்ள நோயாளியைப் பார்க்கச் செல்பவர் தாம் 'பார்வையாளர்' என்றார். நாங்கள் வீடு திரும்பினோம்.




அப்போது எங்கள் ஆசிரியர், சென்ற ஆண்டு சுற்றுலாவாகத் திருவில்லிப்புத்தூர் வனச்சரணாலயம் சென்று வந்ததை விளக்கமாக எடுத்துக் கூறினார். அங்கு எடுக்கப்பட்ட வனத்துறை விளம்பர நிழற்படங்களை எங்களுக்குக் காட்டினார். அது 'சாம்பல் நிற அணில் வன உயிரினச் சரணாலயம்' என்று அறிந்து கொண்டோம்.







## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

**1. கோடிட்ட இடத்தை நிறைவு செய்க.**

1. செஞ்சியின் புகழ்பெற்ற மன்னன் ______________________.
2. செஞ்சிக்கோட்டை ______________________ மாவட்டத்தில் உள்ளது.
3. செஞ்சிக்கோட்டை ______________________ துறையால் பாதுகாக்கப்படுகிறது.
4. சென்னை அரசுப் பொது மருத்துவமனையின் பார்வையாளர் நேரம் ______________ முதல் ______________ வரை.
5. திருவில்லிபுத்தூர் வனச் சரணாலயம் ______________ வேட்டையாடக் கூடாது என்று அறிவித்துள்ளது.

**2. தொலைக் காட்சியில் ஒளிபரப்பாகும் விளம்பரங்களில் உனக்குப்பிடித்த விளம்பரத்தை எழுதுக / பேசுக.**

______________________________________________.

______________________________________________.

______________________________________________.

புகை நமக்குப் பகை.புகை பிடிப்பது உடல் நலத்திற்குக் கேடு.புகையிலையை எந்த வடிவத்தில் பயன்படுத்தினாலும் புற்றுநோயை உருவாக்கும்.

3. மேற்கண்ட விளம்பரத்தைப் படித்துப்பார். வினாக்களுக்கு விடையளி.

1. புகை பிடித்தால் என்ன நோய் ஏற்படும் ?
2. புகைக்கும் பொருள்கள் எதனால் செய்யப்படுகின்றன ?
3. பொது இடங்களில் புகைபிடிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. ஏன் ?

4. நீ தெருவில் செல்லும்போது பல விளம்பரங்களைப் பார்த்திருப்பாய். 'மரங்களை வளர்க்க வேண்டும்' என்பதற்கு என்னென்ன விளம்பரங்களை எழுதி இருக்கிறார்கள் என்பதை எழுதுக.

______________________________

______________________________

______________________________

5. எந்தெந்த ஊடகங்கள் வழி விளம்பரங்கள் செய்யப்படுகின்றன ? அவற்றின் பெயர்களை எழுதுக.

(எ.டு) செய்தித்தாள்கள் ______________________________

______________________________ ______________________________

6. பின்வரும் விளம்பரங்களில் எது சரி (✓) எது தவறு (×) என்றுகுறிப்பிடுக.

| | | | |
|---|---|---|---|
| தானங்களில் சிறந்தது இரத்ததானம்<br>–மருத்துவத் துறை | ☐ | பார்வையாளர்கள் எப்பொழுதும் வரலாம்.<br>–மருத்துவ மனை | ☐ |
| நிலத்தடி நீரைச் சேமிப்போம்.<br>மழை பெற மரம் வளர்ப்போம். | ☐ | தேசிய சின்னங்களைப் பாதுகாக்க வேண்டும்.<br>–தொல்பொருள்துறை | ☐ |

## செயல் திட்டம்

நீ பார்த்த / படித்த விளம்பரங்களை இனவாரியாகப் பாகுபடுத்தி அட்டவணை உருவாக்குக.

மருத்துவம் சார்ந்த விளம்பரங்கள்

கல்வி சார்ந்த விளம்பரங்கள்

வணிகம் சார்ந்த விளம்பரங்கள்

## 16. மேகமும் மணற்குன்றும்

மத்திய தரைக்கடலில் உருவான மிகப் பெரிய ஒரு புயலால் பிறந்தது, அந்தச் சிறுமேகம். தான் பிறந்த மத்திய தரைக்கடல் பகுதியில் வளர வாய்ப்புக் கிட்டவில்லை. உடன் வீசிய சூறாவளியால் அம்மேகம் வேகமாகத் தள்ளப்பட்டு, உறவினரோடு ஆப்பிரிக்கா கண்டம் நோக்கிப் பயணம் செய்தது.

ஆப்பிரிக்கா கண்டத்தில் நுழைந்ததும் வானிலை மாறிவிட்டது. பளீரென ஒளி வீசும் சூரியக் கதிர்களுக்குக் கீழ், பரந்து விரிந்த சகாரா பாலைவனம் இருந்தது. பாலைவனத்தில் மழை பொழியாததால் காற்று மேகங்களைத் தெற்கு ஆப்பிரிக்கக் காட்டுப் பகுதிக்குத் தள்ளிக்கொண்டு சென்றது.

எல்லா மேகங்களும் காற்றோடு இணைந்து ஆப்பிரிக்காவின் மையப் பகுதிக் காடுகளுக்குச் சென்றன. இந்தக் குட்டி மேகம் மனிதரைப் போல உலகைத் தெரிந்துகொள்ள ஆசை கொண்டது. தன் பெற்றோரையும், தன் உறவினரையும், நண்பரையும் விட்டுப் பிரிந்து தன் வழியே செல்ல விருப்பம் கொண்டது.

“என்ன செய்கிறாய் ?” அதட்டியது காற்று. “இந்தப் பாலைவனம் எங்கும் மணலாகத்தான் இருக்கும். மற்ற மேகங்களோடு மீண்டும் இணைந்து கொள். ஆப்பிரிக்காவின் மத்தியப் பகுதியில் வியப்பூட்டும் காட்டுப்பகுதி உள்ளது. அங்கே செல்லப்போகிறோம்” என்றது காற்று. குட்டி மேகம் அதை மறுத்துத் தன் எண்ணத்தைப் பிற மேகங்களிடம் தெரிவித்தது; மெல்லக் கீழ்நோக்கி இறங்கியது.

குட்டி மேகத்தின் ஆசையை நிறைவேற்றத் தென்றல் காற்று உதவி செய்தது. அம்மேகத்தைச் சுமந்து பாலை நிலத்தின்மேல் நிறுத்தியது. அந்த இடத்தில் ஒரு மணற்குன்று தன்னைப் பார்த்துப் புன்முறுவல் பூத்ததை மேகம் உணர்ந்தது; அதை உற்றுநோக்கியது. அதுவும் ஒரு மிகச் சிறிய மணற்குன்று. சற்றுமுன் வீசிய காற்றினால் உருவாகியிருந்தது.

மேகம் முகமலர்ச்சியோடு மணற்குன்றுடன் உரையாடத் தொடங்கியது. “நண்பா ! வணக்கம். நீ எப்படி இருக்கிறாய் ?”

மணற்குன்றுக்கு ஒரே மகிழ்ச்சி. “நண்பா! நான் நலமாக உள்ளேன். என்னைச் சூழ மணற்குன்றுகள் உள்ளன; சூரியனும் காற்றும் முறையே வெப்பத்தையும் குளிர்ச்சியையும் தருகின்றன. அவ்வப்போது இவ்விடத்தைக் கடந்து செல்லும் வணிகர்கள் கூட்டமும் உள்ளது. கொடிய வெயில் என்றாலும் என்னால் தாங்கிக் கொள்ள முடியும். நீ எப்படி இருக்கின்றாய், நண்பா !” என்றது.

“இங்கும் வெயிலும் காற்றும் உள்ளன. வான்வெளியில் மிதப்பதால் பல்வேறு காட்சிகளைக் காண்கிறேன். உன்னை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. உன்னோடு நட்புக் கொள்ள விரும்புகிறேன். உன்னைப் பற்றிச் சொல்! ”என்றது மேகம்.



“என்னைப் பற்றி என்ன சொல்வது ? ஆப்பிரிக்கக் காட்டுப் பகுதியில் இருந்து வரும் சூறைக்காற்று என்மேல் பட்டால் நொடியில் காணாமல் போவேன். இதுதான் என் வாழ்க்கை” என்றது மணற்குன்று.

“ஓ..... அதற்காகத்தான் வருத்தப்படுகிறாயா ?”

“வருத்தப்படவில்லை, நண்பா! என் வாழ்க்கைக்கு எந்தப் பொருளும் இல்லை; குறிக்கோளும் இல்லை எனப் புரிந்துகொண்டேன். சரி உன்னைப் பற்றிச் சொல்.”

“நானும் உன்னைப் போல் தான். எந்த விநாடி என்மீது வேகமாகக் காற்று மோதினாலும், தெற்குக் காட்டுப் பகுதியில் சென்று மரங்களின் நடுவில் மழையாய்ப் பொழிந்துவிடுவேன். அதுதான் என் பிறப்பின் குறிக்கோள்.”

“நாங்கள் மழை என்பதைச் சொர்க்கம் என்று கூறுவோம். இது உனக்குத் தெரியுமா ?” என்று மணற்குன்று மேகத்திடம் வினவியது.

“அதைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், மழை பொழிய நானும் ஒரு கருவி என்பது மட்டும் எனக்குத் தெரியும்” என்றது மேகம் பெருமையுடன்.

மணற்குன்று தொடர்ந்தது. “எங்கள்மேல் மழை பொழிந்தால், நாங்கள் புல்லாலும், பூச் செடிகளாலும், மரங்களாலும் நிரம்பி மிக அழகாக மாறுவோம் என என்னுடன் இருக்கும் வயதான மணற்குன்றுகள் கூறுகின்றன. ஆனால், நான் அப்படி மாறுவேனா என்பது தெரியாது. ஏனென்றால், இந்தப் பகுதியில் மழை மிகமிக அரிது.”

மேகம் முகமலர்ச்சியோடு கூறியது, “கவலைப்படாதே ! நீ விரும்பினால் நான் உன் மீது மழையாகப் பொழிகிறேன். இப்போதுதான் நாம் சந்தித்திருந்தாலும், நண்பனே, உன்னோடு தங்க விரும்புகிறேன்.”

“வானில் உன்னைப் பார்த்தவுடன் எனக்கும் உன்னைப் பிடித்துவிட்டது. உன் நட்புக் கிடைத்தது என்னுடைய பெரும்பேறு. ஐயோ, நண்பா! நீ மழையாய்ப் பொழிந்தால் உடனே மறைந்து விடுவாயே !”

“நட்பு என்றுமே மறையாது!, நீ விரும்பிய சொர்க்கத்தை இப்போது கொண்டு வருகிறேன்.” சிறுசிறு துளிகளால் மழை பொழிந்து மேகம் மறைந்து போனது. மழை பெய்தபின் வானவில் தோன்றியது.

நாள்கள் சில கடந்தன. அச்சிறிய மணற்குன்றின்மேல் பசுமை படர்ந்தது. பூக்கள் நிரம்பியதாய், புல் மிகுந்ததாய் அது செழிக்கத் தொடங்கியது. தொடர்ந்து வந்த மேகங்கள் இதுவும் தாங்கள் தேடிவந்த சிறுகாடு என நினைத்து, மழையைப் பொழிந்துவிட்டுச் சென்றன.

இருபது ஆண்டுகளுக்குப் பின், அந்த மணற்குன்று பாலைவனப் பயணிகள் விரும்பித் தங்கும் ‘பாலைவனச் சோலை’யாய் மாறி இருந்தது. தன்னை நாடிவரும் உயிர்களின் சோர்வையும், களைப்பையும் தன்னிடமுள்ள நீரினாலும் மரங்களின் நிழலினாலும் தீர்த்தது.

இவை எல்லாவற்றிற்கும் காரணம், அன்றொருநாள் அந்தச் சிறுமேகம், இந்தச் சிறு குன்றுடன் கொண்ட நட்புக்காகத் தன் உயிரைத் தந்த ஈகம் தானே !

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

### 1. அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.

கண்டம் ________ பாலைவனம் ________

புன்முறுவல் ________ பெரும்பேறு ________

ஈகம் ________ சூறாவளி ________

### 2. பிரித்து எழுதுக.

சூரியக்கதிர் ________ மணற்குன்று ________

சூறைக்காற்று ________ பூச்செடி ________

### 3. சேர்த்தெழுதுக.

பாலை + வனம் ________ காடு + பகுதி ________

உரு+ ஆகி ________ முகம் + மலர் ________

### 4. கோடிட்ட இடத்தை நிறைவு செய்க.

1. குட்டிமேகத்தின் ஆசையை நிறைவேற்ற ________ உதவி செய்தது.
2. ஆப்பிரிக்கா கண்டத்தில் ________ பாலைவனம் உள்ளது.
3. சிறுசிறு துளிகளாய் பொழிந்து ________ மறைந்து போனது.
4. இருபது ஆண்டுகளுக்குப் பின் மணற்குன்று ________ சோலையாய் மாறி இருந்தது.
5. ஐயோ! நண்பா. நீ மழையாய்ப் பொழிந்தால் உடனே ________ விடுவாயே.

### 5. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மேகம் ________ கண்டம் நோக்கிப் பயணம் செய்தது.

   அ) ஆசியா ஆ) ஆப்பிரிக்கா இ) ஆஸ்திரேலியா

2. மேகம் ________ குன்றுடன் நட்புக் கொண்டது.

   அ) கல் ஆ) மணல் இ) மலை

3. நாங்கள் ________ என்பதைச் சொர்க்கம் என்று கூறுவோம்.

   அ) கடல் ஆ) பூமி இ) மழை

4. மழை பெய்தபின் ________ தோன்றியது.

   அ) பசும்புல் ஆ) வானவில் இ) பூக்கள்

### 6. விடையளிக்க.

1. குட்டிமேகம் எந்தப் பகுதிக்குச் சென்றது ?
2. காற்று எந்தப் பகுதிக்குச் செல்லப்போகிறோம் என்று குட்டிமேகத்திடம் கூறியது ?
3. மணற்குன்று எவ்வாறு உருவாகியது ?
4. நட்புக்காக மேகம் செய்தது என்ன ?
5. மழை பெய்தவுடன் மணற்குன்று எதுவாக மாறியது ?

7. பின்வரும் நேர்இணைச் சொற்களைப் பயன்படுத்தித் தொடர் எழுதுக.

(எ.டு) பேரும் புகழும் – டாக்டர் அப்துல்கலாம் பேரும் புகழும் பெற்ற அறிவியல் அறிஞர் ஆவார்.

1. ஈடு இணையற்ற

______________________________

2. சீராட்டிப் பாராட்டி

______________________________

3. போற்றிப் புகழ்ந்து

______________________________

8. பின்வரும் மரங்கள் தம் பயன்பாடு பற்றிக் கூறுவது போல் எழுதுக.



______________________________

______________________________

______________________________



______________________________

______________________________

______________________________

9. தேவையான இடத்தில் நிறுத்தற் குறிகள் இட்டுத் தொடரை எழுதுக.

| | |
|---|---|
| முற்றுப்புள்ளி ( . ) | – கருத்து முடியும் இடத்தில் வைக்கப்பட வேண்டும். |
| காற்புள்ளி ( , ) | – பொருள்கள் அடுக்கி வரும்போது ஒவ்வொரு சொல்லுக்குப் பின்னும் இடவேண்டும். |
| வினாக்குறி ( ? ) | – வினாத்தொடரின் இறுதியில் இடவேண்டும். |
| மேற்கோள்குறி (' ') | – மேற்கோள் அல்லது சிறப்புப்பெயர் சுட்டிக்காட்ட இக்குறி இடவேண்டும். |
| உணர்ச்சிக்குறி ( ! ) | – அச்சம், மகிழ்ச்சி, வியப்பு போன்ற உணர்ச்சிகளைக் குறிக்க இடவேண்டும். |

1. பூந்தோட்டத்தில் முல்லை மல்லிகை போன்ற மலர்கள் பூத்துக் குலுங்கின.
2. எங்கள் வீட்டில் ஆடு மாடு கோழி போன்ற விலங்குகளை வளர்க்கிறோம்.
3. நாளை மழை பெய்யுமா என்று அகிலா கேட்டாள்

**செயல் திட்டம்**

உரிய நிறுத்தற் குறிகளை இட்டு, காடுகளின் பயன் குறித்துப் பத்து வரிகளில் ஒரு கட்டுரை எழுதுக.

# 17. அணையா விளக்கு

(கோடை விடுமுறை. மாதவியும் அவள் தாத்தாவும் சென்னையைச் சுற்றிப் பார்க்கச் சென்றனர். மெரினா கடற்கரை, அண்ணா நினைவிடம், எம்.ஜி.ஆர் நினைவிடம் ஆகியவற்றைப் பார்த்தனர். பின்பு கிண்டியில் உள்ள இராஜாஜி நினைவிடம், காந்தி மண்டபம், காமராசர் நினைவாலயம் பார்த்துவிட்டு வெளியே வந்தனர்.)




**தாத்தா:** மாதவி...... தலைவர்களின் நினைவிடங்களைப் பார்க்கும்போது அவர்களைப் போலவே நாமும் மக்களுக்காகப் பாடுபடவேண்டும் என்னும் எண்ணம் நம் மனத்தில் தோன்றுகிறது அல்லவா ?

**மாதவி:** ஆமாம்...... தாத்தா...... அதுவும் பெருந்தலைவர் காமராசர் நினைவாலயத்தைப் பார்த்தவுடன் அவரைப் பற்றிய பல செய்திகளை அறிந்து கொள்ளவேண்டும் என்னும் ஆர்வம் ஏற்படுகிறது.

**தாத்தா:** அப்படியா! நாட்டையே தம்முடைய குடும்பமாக நினைத்து, அல்லும் பகலும் அயராது பாடுபட்டவர் காமராசர். 'விருதுபட்டி' என்று அப்போது அழைக்கப்பட்ட விருதுநகரில் 1903ஆம் ஆண்டு சூலைத்திங்கள் 15ஆம் நாள் குமாரசாமிக்கும், சிவகாமி அம்மையார்க்கும் அருந்தவப் புதல்வராய்த் தோன்றினார்.

மாதவி: இந்தியாவின் முதல் முதன்மை அமைச்சர் நேரு போன்று அரசியல் பின்னணி உள்ளவரா காமராசர் ?

தாத்தா: இல்லை..... இல்லை..... காமராசர் எளிய குடும்பத்தில் பிறந்தவர்; ஆனாலும் ஏற்றம் பல கண்டவர்.

மாதவி: ஆபிரகாம் லிங்கன் என்பவர் தம்முடைய முயற்சியால் அமெரிக்காவின் அதிபர் ஆனார். அவரும் எளிய குடும்பத்தில் தோன்றியவர் என்று என் பள்ளி நூலகப் புத்தகத்தில் படித்திருக்கிறேன்.

தாத்தா: உண்மை.... உண்மை..... 'திண்ணியராகப் பெறின் எண்ணிய எண்ணியாங்கு எய்துவர்' என்பார் திருவள்ளுவர். அகிலம் போற்றும் ஆபிரகாம் லிங்கன், கருப்பர்களின் அடிமைத் தளையை அறுத்தவர். அதுபோலவே, காமராசரும், 'அனைத்து மக்களுக்கும் கல்வி வழங்கப்பட வேண்டும்; கல்விதான் வீட்டையும் நாட்டையும் உயர்த்தும்' என அறிந்து சட்டங்கள் கொண்டுவந்து செயலாற்றியவர்.

மாதவி: காமராசர் எதுவரை படித்துள்ளார் ?

தாத்தா: காமராசர் தம் ஆறாம் அகவையிலேயே தந்தையை இழந்துவிட்டார். வறுமை காரணமாக ஆறாம் வகுப்பில் படிப்பை இடையில் நிறுத்திவிட்டுக் கடையில் வேலைக்குச் சேர்ந்துவிட்டார்.

மாதவி: கடையில் வேலை செய்த காமராசர், எப்படி அரசியலில் நுழைந்தார் ?

தாத்தா: அப்போது நமது நாட்டை ஆங்கிலேயர்கள் ஆண்டு வந்தனர். காந்தியடிகள் தலைமையில் நாட்டு விடுதலைக்காக அறவழிப் போராட்டங்கள் இந்தியா முழுவதும் நடந்தன. காந்தியடிகளின் அறவழிப் போராட்டங்களால் ஈர்க்கப்பட்டு, காமராசர் அரசியலில் தம்மை இணைத்துக்கொண்டார்.

மாதவி: காமராசரும் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டாரா ?

தாத்தா: ஆமாம்...... தீண்டாமை ஒழிப்புப் போராட்டம், கள்ளுக்கடை மறியல், ஒத்துழையாமை இயக்கம் முதலிய பல போராட்டங்களில் கலந்துகொண்டார். ஒன்பது முறை சிறை சென்றார். சிறையில் கிட்டத்தட்ட மூவாயிரம் நாள்கள் அடைபட்டுக் கிடந்துள்ளார்.

மாதவி: அடேயப்பா......இத்தனை நாள்களா...... விடுதலைப் போரில் இவ்வளவு துன்பங்களா ?

தாத்தா: ஆமாம் மாதவி . . . . . . 1947 ஆகஸ்டு 15ஆம் நாள் நம்நாடு விடுதலை அடைந்தது. இந்தியாவின் முதன்மை அமைச்சராகப் பண்டித ஜவஹர்லால் நேரு பதவியேற்றார். தமிழ்நாட்டுக் காங்கிரசின் தலைவராக இருந்த காமராசர் 1954ஆம் ஆண்டு ஏப்ரல் 13ஆம் நாள் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பதவியேற்றார்.

மாதவி: விடுதலைக்காகப் போராடிய காமராசர், தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பணியேற்றது நம் தவப்பயன் அல்ல வா ?

தாத்தா: ஆம்..... மிகவும் சரியாகச் சொன்னாய் மாதவி! பதவியேற்றவுடன் கல்வியில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்தினார்; குலக்கல்வித் திட்டத்தை ஒழித்தார்; சிற்றூர் தோறும் பள்ளிகள் தொடங்க ஆணையிட்டார்.

வயிற்றுக்குச் சோறிட வேண்டும் – இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்
பயிற்றிப் பலகல்வி தந்து – இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்.



என்னும் பாரதியார் கனவை நனவாக்க ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவுத்திட்டம் கொண்டுவந்து செயல்படுத்தினார். பள்ளி மாணவர்களில் ஏழை பணக்காரன் வேறுபாடு காட்டாதிருக்கப் பள்ளிச் சீருடைத் திட்டத்தைக் கொண்டுவந்து பலரின் பாராட்டைப் பெற்றார். நாட்டில் கல்விவெள்ளம் கரைபுரண்டு ஓடத் தொடங்கியது.

மாதவி: இன்றைய கல்வி வளர்ச்சிக்குப் பெருந்தலைவர் காமராசர் அமைத்த அடித்தளம்தான் காரணம் என்று கூறலாமா ?

தாத்தா: ஆமாம். அதனால்தான், நமது தமிழகஅரசு காமராசர் பிறந்தநாளைக் ‘கல்வி வளர்ச்சி நாளாகக்’ கொண்டாடவேண்டும் என்று ஆணையிட்டுச் செயல்படுத்தி வருகிறது. சென்னையில் அவர் வாழ்ந்த வீட்டை ‘நினைவுச் சின்னமாக’ ஆக்கியுள்ளது. சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் உள்ள உள்நாட்டு முனையத்திற்கு காமராசர் பெயரைச் சூட்டிப் பெருமைப்படுத்தி உள்ளது. காமராசருக்கு தமிழக அரசு நினைவகம் அமைத்துள்ளது. இந்நினைவகத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் ‘அணையா விளக்கை’ ஏற்றிவைத்துப் பெருமைப்படுத்தி உள்ளார். ஆம் ! காமராசர், காலத்தால் அணையா விளக்கல்லவா !



மாதவி: எங்கள் பள்ளியிலும் கல்வி வளர்ச்சி நாளைச் சிறப்பாகக் கொண்டாடினோம் தாத்தா......!

தாத்தா: கல்வி மட்டுமா வளர்ந்தது! ’சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்’ என்றார் திருவள்ளுவர். அதனால், வேளாண்மைத் தொழில் வளரப் பல அணைக் கட்டுகளைக் காமராசர் உருவாக்கினார். சாத்தனூர், வைகை, மணிமுத்தாறு, அமராவதி, ஆழியாறு, கீழ்பவானி, புள்ளம்பாடி அணைகள் அவற்றுள் சிலவாகும்.



நாட்டில் பல்வேறு தொழில்களும் பெருக சிமெண்ட் ஆலைகள், காகித ஆலைகள், நூற்பு ஆலைகள் முதலிய தொழிற்சாலைகளை வாய்ப்புள்ள இடங்களில் எல்லாம் உருவாக்கினார் காமராசர். பெரம்பூர் இரயில் பெட்டி தொழிற்சாலை, தூத்துக்குடி துறைமுகம், திருச்சி பாரத மிகுமின் நிறுவனம் முதலியனவும் இவருடைய ஆட்சிக் காலத்தில் உருவானவையே.

மாதவி: கல்வியிலே புரட்சி...... வேளாண்மையிலே மலர்ச்சி....... தொழிலிலே வளர்ச்சி...... நாடெங்கும் எழுச்சி....... இல்லையா தாத்தா ?

தாத்தா: உண்மைதான்! நேர்மை, உண்மை, பணிவு, துணிவு, எளிமை, இனிமை இவை அவரின் தலைசிறந்த பண்புகள். தமிழர்களின் வாழ்வில் எழுச்சியூட்டிய தந்தை பெரியார், இவரைக் ‘கல்விக்கண் கொடுத்த வள்ளல் காமராசர்’ என்று பாராட்டினார். ‘படிக்காத மேதை’, ‘பெருந்தலைவர்’, ‘கர்ம வீரர்’, ‘ஏழைப் பங்காளர்’ எனக் காமராசரை மக்கள் சிறப்பிக்கின்றனர். வடஇந்தியச் செய்தித்தாள்கள் ‘காலா காந்தி’(கருப்புக் காந்தி) எனப் போற்றுகின்றன. புகழ்மிக்க பெருவாழ்வு வாழ்ந்த மேதை காமராசர் 1975ஆம் ஆண்டு அக்டோபர் 2ஆம் நாள்– காந்தி பிறந்த நாளில்– இவ்வுலக வாழ்வை நீத்தார்.

மாதவி: தன்னலமற்ற பெருவாழ்வு வாழ்ந்த பெருந்தலைவர் காமராசரை ‘நெஞ்சில் நிறுத்துவோம்’ !நாளும் அவர் புகழ் பாடுவோம்!

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

**1. அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.**

ஏற்றம் ____________ திண்ணியர் ____________

எய்துவர் ____________ அகிலம் ____________

அகவை ____________ மேதை ____________

**2. பிரித்து எழுதுக.**

நினைவிடம் ____________ பெருந்தலைவர் ____________

பதவியேற்றார் ____________ தொழிற்சாலை ____________

**3. எதிர்ச்சொல் எழுதுக.**

ஏற்றம் × ____________

சிற்றூர் × ____________

மேதை × ____________

**4. கோடிட்ட இடத்தை நிறைவு செய்க.**

1. அமெரிக்க நாட்டுக் கருப்பர்களின் அடிமைத் தளையை அறுத்தவர் ________
2. காமராசர் ____________________ முறை சிறை சென்றார்.
3. பள்ளியில் பயிலும் ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டுவந்தவர் ____________________
4. காமராசரின் பிறந்தநாளைக் ____________ நாளாகக் கொண்டாடுகிறோம்.
5. கல்விக்கண் கொடுத்த வள்ளல் எனக் காமராசரைப் பாராட்டிப் புகழ்ந்தவர் ____________

**5. விடையளிக்க.**

1. காமராசரின் பெற்றோர் யாவர் ?
2. காமராசர் கலந்துகொண்ட விடுதலைப் போராட்டங்கள் யாவை ?
3. சுதந்தர இந்தியாவின் முதல் முதன்மை அமைச்சர் யார் ?
4. காமராசரின் எந்தெந்தத் திட்டங்களால் கல்வி வளர்ச்சியடைந்தது ?
5. முதலமைச்சர் காமராசரின் ஆட்சியில் கட்டப்பட்ட அணைகள் யாவை ?

**6. ஆறுவரிகளுக்கு மிகாமல் விடை தருக.**

1. பாரதியார் கண்ட கனவு யாது ?
2. காமராசர் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சியை எழுதுக.
3. காமராசர் எவ்வாறெல்லாம் பாராட்டப்படுகிறார் ?
4. தமிழக அரசு காமராசரை எவ்வாறெல்லாம் பெருமைப் படுத்தி உள்ளது ?

**7. குழுவில் பொருந்தாது இருக்கும் பெயரைத் தனியே எடுத்து எழுதுக.**

1. இந்தியா, இங்கிலாந்து, அமெரிக்கா, தமிழ்நாடு. ____________
2. சாத்தனூர், புதுக்கோட்டை, வைகை, அமராவதி. ____________

**8. தலைவர்களின் சிறப்புப் பெயர்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

காமராசர் ________________

அண்ணா ________________

பெரியார் ________________

வ.உ.சி. ________________

காந்தியடிகள் ________________

கப்பலோட்டிய தமிழன்,
பெருந்தலைவர்,
பேரறிஞர்,
தேசத்தந்தை,
பகுத்தறிவுப் பகலவன்.

**9. பின்வரும் தலைவர்கள் பற்றி தடையின்றிப் பேசுக / எழுதுக.**



________________________________

________________________________

________________________________

________________________________



________________________________

________________________________

________________________________

________________________________

## செயல் திட்டம்

உனக்குப் பிடித்த தலைவர்களின் படங்களைச் சேகரித்துப் படத்தொகுப்பு அமைக்க. அவர்கள் பற்றி ஐந்து வரிகளில் சிறுகுறிப்பு வரைக.

## விளையாடலாம் வாங்க!

வட்டமாக அமர்க. தலைவர்கள் / விலங்குகள் / பறவைகள் பெயர்களைத் தனித் தனித் துண்டுத் தாளில் எழுதிச் சுருட்டிக் கொள்க. அவற்றை ஓர் அட்டைப் பெட்டியில் வைத்துக் கொள்க. ஒருவர் தொடங்குவதற்கு அடையாளமாக ஒலி எழுப்புக. உடனே பெட்டியை ஒருவரிடம் இருந்து மற்றவருக்கு மாற்றித் தொடர்ந்து கடத்துக. திடீரென்று ‘நிறுத்துக’என்பதற்கு ஒலி எழுப்புக. அப்போது, பெட்டி யார் கையில் உள்ளதோ அவர் அதிலுள்ள ஒரு துண்டுச் சீட்டை எடுத்துப் படிக்க. அதில் உள்ள தலைவர் / விலங்கு / பறவை பற்றித் தடையின்றி ஒரு நிமிட நேரம் பேசுக. நன்கு பேசுபவரைப் பாராட்டுக. விளையாட்டைத் தொடர்க.

# 18. செம்மொழி – பண்பாட்டு மொழி




செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் 2008 மே 19ஆம் நாள் முதல் சென்னையில் இயங்கி வருகிறது. இங்குத் தமிழ், தமிழரின் தொன்மை, பண்பாடு, நாகரிகம், கலைகள், இலக்கியம் குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

'எம்மொழி செம்மொழி?' என்று கேட்டால், 'எம் மொழி–தமிழ்மொழி–செம்மொழி' என்போம். செம்மொழி என்பது என்ன? தொன்மைச் சிறப்பும் பண்பாட்டுச் செறிவும் இலக்கிய மரபும் இலக்கண வரையறையும் உடைய மொழிகளெல்லாம் செம்மொழிகளே என்பர் மொழியியலார்.

சிந்துச் சமவெளி அகழ்வு ஆராய்ச்சியில் கிடைத்த பொருள்களும் தமிழ் நாட்டில் பழனி, ஆதிச்சநல்லூர், அரிக்கமேடு போன்ற இடங்களில் அகழ்வு ஆராய்ச்சியில் கிடைத்த பொருள்களும் ஏறக்குறைய ஒன்றாகக் காணப்படுகின்றன. எனவே, தமிழின் தொன்மை, வரலாற்றுச் சான்றுகளாலும் நன்கு அறியப்படும்.



பழனி, ஆதிச்சநல்லூரில் அகழ்வாய்வில் கிடைத்த பழங்கால உடைந்த மண்பாண்டங்கள், ஓடுகள், கரிய மற்றும் செந்நிறப் பானைகள், இரும்பாணி கொண்டு எழுதப்பட்ட பானை ஓடுகள்

தமிழ்மொழி இரண்டாயிரத்து எழுநூறு ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்பதற்கான சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. தமிழ் இலக்கியங்கள் தொன்மை, பழமை, செழுமை ஆகிய பண்புகளுடன் செறிந்து காணப்படுகின்றன. தமிழ், ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்னும் பண்பாட்டுச் செறிவு மிக்கது; சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டு முதல் பாரதிதாசனாரின் குடும்பவிளக்கு வரை, பாட்டுமரபும் இலக்கியச்செறிவும் கொண்டது; எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து இலக்கண வரம்பு கொண்டது; இவை எல்லாவற்றுக்கும் மேலாக எந்த மொழிச் சார்பு இல்லாமல் தனித்தே இயங்கும் ஆற்றல் கொண்டது.

ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு உயிர்வரை உயிர்களை வகைப்படுத்திய நுட்பம் தமிழரைத் தவிர எவர்க்குண்டு? ஆண்டான் அடிமை என்று வேறுபட்டு நின்ற உலகத்துக்குப் ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்று பிறப்பு இயல்பு கூறும் மொழி தமிழ்மொழியே ஆகும். உலகத்தார் எல்லார்க்கும் ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்னும் உயரிய அறத்தைத் தமிழே சொன்னது.

ஆடவர்க்கு இணையான கல்வியும் செல்வமும் அறிவு நுட்பமும் கொண்டவள் தமிழ்ப்பெண். சங்க காலத்தில் வாழ்ந்த ஒக்கூர் மாசாத்தியார், ஔவையார், காக்கைப் பாடினியார், நக்கண்ணையார், பொன்முடியார், வெண்ணிக் குயத்தியார், வெள்ளிவீதியார் முதலிய பெண்பாற் புலவர்கள் கல்விக்கும் அறிவு நுட்பத்துக்கும் சான்றாய் உள்ளனர். இக்காலத்திலும் தமிழ்ப் பெண்கள் பலர் சாதனையாளர்களாகத் திகழ்கின்றனர்.

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு

—பாரதிதாசன்.

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

**1. அகராதியைப் பார்த்துப் பொருள் எழுதுக.**

தொன்மை ____________ மரபு ____________

திண்மை ____________ செம்மை ____________

**2. பிரித்து எழுதுக.**

மொழிகளெல்லாம் ____________

பிறப்பொக்கும் ____________

**3. கோடிட்ட இடத்தை நிறைவு செய்க.**

1. எல்லா உயிர்க்கும் ____________ ஒக்கும்.
2. தமிழில் ____________ இலக்கணப் பகுதிகள் உண்டு.

**4. விடையளிக்க.**

1. செம்மொழி என்பதற்கு மொழியியலார் கூறும் வரையறை யாது ?
2. தமிழின் தொன்மையை வரலாற்று சான்றுகளால் எவ்வாறு அறியலாம் ?
3. சங்ககாலப் பெண்பாற் புலவர்கள் பெயர்களை எழுதுக.

**5. ஆறுவரிகளுக்கு மிகாமல் விடை தருக.**

தமிழின் சிறப்புகளை எழுதுக.

## 19. படமும் பாடமும் (பட அகர முதலி)

ஒரு சொல்லுக்குப் பொருள் தெரிந்துகொள்ள வேண்டுமானால் அகரமுதலியைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

(எ.கா.) புரவி – குதிரை.

ஆனால், குதிரை பற்றிய பல செய்திகளைத் தெரிந்துகொள்ள கலைக் களஞ்சியத்தைப் பார்க்கவேண்டும். குழந்தைகளுக்கான 'சிறுவர் கலைக் களஞ்சியம்' பதினொன்று தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன.

'பட அகர முதலி' என்பது ஒன்றின் படத்தையும் அது பற்றிய சிறு செய்தியையும் அறிய உதவும். தானே கற்றலுக்கும், சொற்களஞ்சியப் பெருக்கத்திற்கும் இது உதவும். நீங்களும் பட அகர முதலி அமைக்கலாமே!

**தவில்** பெரிய உருளை வடிவத்தில் இருக்கும் தோல் கருவி. இருபுறமும் தோலால் மூடி இழுத்துக் கட்டப்பட்டிருக்கும். ஒருபுறம் கையாலும் மறுபுறம் சிறுகோலாலும் அடித்து இசைக்கப்படும். நாகசுர இசையும் இதனோடு இணையும். மங்கல நிகழ்ச்சிகளில் பயன்படுத்தும் இசைக்கருவி இது.



**தாழை** நீர் நிலைகளின் கரைகளிலும் மணற்பாங்கான இடங்களிலும் வளரும் சிறு மரவகை. இதன் மடல்கள் மஞ்சள் நிறமாக இருக்கும்; மணம் வீசும்; நீண்டு இருக்கும். இதனைத் தாழம்பூ என்பர். மகளிர் தம் கூந்தலில் மகிழ்ச்சியோடு இதைச் சூடிக் கொள்வர்.



**திமிங்கிலம்** மீனைப் போன்ற உருவம் உடைய மிகப் பெரிய விலங்கு. கடலில் வாழும் பாலூட்டி இனத்தைச் சார்ந்தது. ஏறத்தாழ எழுபது அடி நீளம் வளரும். ஆழம் மிகுந்த கடலில் காணப்படும். திமிங்கிலங்களில் பலவகை உண்டு.



**தீக்கோழி** உலகிலுள்ள பறவைகளில் மிகப் பெரியது தீக்கோழி(நெருப்புக்கோழி). இதன் உயரம் இரண்டரை மீட்டர். இதன் எடை ஏறத்தாழ நூற்றுமுப்பது கிலோகிராம். இதற்கு இறக்கைகள் உண்டு. எனினும், பறக்க இயலாது. ஆனால், மணிக்கு நூறு கிலோ மீட்டர் வேகத்தில் ஓடக்கூடியது.



## துளசி

இது பச்சை இலையும், கருநீலத் தண்டும் உடைய ஒருவகைச் செடி. காரச் சுவையும் மணமும் கொண்டது. மருத்துவக் குணம் உடையது. தொண்டை அழற்சி, சளித்தொல்லை ஆகியவற்றை அகற்றும்.



## தூக்கணங்குருவி



கூம்பு வடிவ அலகினையும், உடலில் கரும்பழுப்பு நிறப் பட்டைகளையும் கொண்ட மஞ்சள் நிறசிறு பறவை. மரக்கிளைகளில் உறிபோல் தொங்கும் கூடுகளை நாரினால் கட்டும். இக்குருவிகள் அருகருகே கூடுகட்டிக் கூட்டம் கூட்டமாய் வாழும்.

## தெளிப்பான்



மெல்லிய செடிகளுக்கும் பூக்களுக்கும் தானியப் பயிர்களுக்கும் மருந்து தெளிக்கப் பயன்படுகிறது. சுவர்களில் வண்ணம் பூசவும் புல்தரைகளுக்கு நீர்த்தெளிக்கவும் உதவுகிறது. விசைத் தெளிப்பான் வாகனங்களைக் கழுவவும் பயன்படுகிறது.

## தேன்



தேனீக்கள் தேனைத் தேனடைகளில் சேமித்து வைக்கின்றன. தேன் மருந்தாகவும் பயன்படுகிறது. சத்துநிறைந்தது. கொம்புத்தேன், மலைத்தேன் எனத் தேனில் பலவகையுண்டு. பல நூறு ஆண்டுகள் ஆனாலும் தூய தேன் கெடாது.

## தையல் சிட்டு



இது சிறிய அழகான பறவை. இதன் கூடு மிகவும் நுட்பமானது. இப்பறவை தன் நீண்ட கூர்மையான அலகினால் பெரிய இலைகளின் ஓரங்களில் துளையிட்டு, அவற்றில் தாவரங்களின் நாரைக் கோத்து ஒரு பை போலத் தைத்துவிடுகிறது. இதன் உட்புறத்தில் மென்மையான புல், கம்பளி, நூல் முதலியவற்றை இட்டுக் கூட்டைச் செம்மைப்படுத்துகிறது. இது டுவிட்... டுவிட்... என்று கத்திக் கொண்டிருக்கும்.

## தொலைக்காட்சி

நேரில் காண முடியாத காட்சிகளை எல்லாம் இதன் மூலம் கண்டுகளிக்கலாம். வானொலி போன்றே இதுவும் செயல்படுகிறது. காட்சிகளை மின்காந்த அலைகளாக மாற்றி வானவெளியில் அனுப்புகின்றனர். இவற்றை

மீண்டும் காட்சிகளாக மாற்றித் தொலைக்காட்சித் திரையில் நாம் காணலாம். 1930இல் 'சுவாரிகன்' என்ற அமெரிக்கர் இதைக் கண்டுபிடித்தார். மக்களுக்குக் கல்வியறிவு புகட்டுவதில் தொலைக்காட்சி சிறந்த பங்கு வகிக்கிறது.



### தோட்டக்கலை



மலர்கள், காய்கறிகள், பழங்கள் முதலானவற்றைப் பார்ப்பதற்கு அழகாகவும், செம்மையாகவும், பயிர்செய்யும் முறையே தோட்டக்கலையாகும். பள்ளிகள், கல்லூரிகள், அரசு அலுவலகங்கள், பூங்காக்கள் முதலான பல இடங்களிலும் பல்வேறு மரம், செடி, கொடிகளை வளர்த்துத் தோட்டங்களை அமைக்கின்றனர். நகரங்களில் அமைக்கும் பூங்காக்களில் யானை, குதிரை போன்ற வடிவங்களில் செடிகளை வெட்டி அழகுபடுத்துகிறார்கள்.

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

**1. சரியா (✔) தவறா (×) குறியிடுக.**

1. திமிங்கிலம் பாலூட்டி இனத்தைச் சேர்ந்தது. ☐
2. தீக்கோழி வேகமாகப் பறக்கும். ☐
3. துளசி மருத்துவக் குணம் நிறைந்த செடி. ☐
4. தூக்கணாங் குருவிக்குக் கூடு கட்டத் தெரியாது. ☐

**2. விடையளிக்க.**

1. தீக்கோழி மணிக்கு எத்தனை 'கிலோமீட்டர்' ஓடும் ?
2. துளசி என்னென்ன நோய்களைக் குணப்படுத்தும் ?
3. தொலைக்காட்சியைக் கண்டுபிடித்தவர் யார் ?
4. தையல்சிட்டு எவ்வாறு கூடு கட்டுகிறது ?

**3. சிறுவர் கலைக்களஞ்சியம் உதவியுடன் பொருள்களைப் பற்றிச் சுருக்கமாக எழுதுக.**

____________________

____________________

____________________

ஆப்பிள்



புலி



## 4. படங்களின் பெயர்களை அகர வரிசைப் படுத்தி எழுதுக.



### செயல் திட்டம்

எவையேனும் இருபது பொருள்களின் படங்களைச் செய்தித்தாள், சிறுவர் இதழ்கள் முதலியவற்றிலிருந்து வெட்டி எடுத்து அகர வரிசையில் ஒட்டுக. அதன் கீழ் அப்பொருளின் சிறப்புப் பண்புகளை நான்கு வரிகளில் எழுதுக.

# செய்யுட்பகுதி

## (அ) திருக்குறள்

### செய்ந்நன்றி அறிதல்

1. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.

நமக்குப் பிறர் செய்த உதவியை நாம் மறக்கக்கூடாது. ஆனால், பிறர் நமக்குச் செய்த தீமையை உடனே மறந்துவிடுவது நல்லது.

### ஒழுக்கமுடைமை

2. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

நல்ல ஒழுக்கம் பல நன்மைகளைத் தரவல்லது. தீய ஒழுக்கம் என்றும் துன்பத்தையே தரும். (இடும்பை – துன்பம்).

### பயனில சொல்லாமை

3. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லில் பயனிலாச் சொல்.

பயன்தரக்கூடிய நல்ல சொற்களையே நாம் பேசவேண்டும். பயன்தராத சொற்களை நாம் பேசுவதைத் தவிர்க்கவேண்டும்.

### வாய்மை

4. தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.

மனம் அறிந்து ஒருவர் பொய்க்கூறுதல் கூடாது. அவ்வாறு கூறினால் அவர் மனமே அவரை வருத்தமடையச் செய்யும். (சுடும் – வருத்தும்)

### வெகுளாமை

5. தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம்.

ஒருவர் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள விரும்பினால் தன் சினத்தை அடக்கிக்கொள்ள வேண்டும்; இல்லாவிட்டால் அந்தச் சினமே அவரை அழித்து விடும்.

(சினம் – கோபம். காவாக்கால் – பாதுகாக்காவிட்டால்)

### தெரிந்து செயல்வகை

6. எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

ஒரு செயலை நன்கு ஆராய்ந்த பின்புதான் தொடங்கவேண்டும். பிறகு, ஆராய்ந்து கொள்ளலாம் என்று எண்ணிச் செயலைத் தொடங்கினால் செயல் முடிவடையாது துன்பமே ஏற்படும்.

(கருமம் – செயல். இழுக்கு – குற்றம்)

### தெரிந்து தெளிதல்

7. குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
   மிகைநாடி மிக்க கொளல்.

ஒருவரிடத்தில் உள்ள நல்ல பண்புகளையும் தீய பண்புகளையும் ஆராய்க. எப்பண்பு மிகுதியாக உள்ளதோ அப்பண்பின் அடிப்படையில் அவர் நல்லவர் அல்லது தீயவர் எனத் தெளிய வேண்டும்.

(மிகை – மிகுதி. நாடி – ஆராய்ந்து)

### ஊக்கமுடைமை

8. வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
   உள்ளத் தனையது உயர்வு.

நீர் மட்டத்தின் அளவே அந்நீர்நிலையில் உள்ள பூக்களின் தண்டும் உயரும். அதுபோல, ஒருவனது மனஉறுதியின் அளவிற்கு ஏற்ப அவனது வாழ்க்கையும் உயரும்.

(வெள்ளம் – நீர். நீட்டம் – உயர்வு)

### ஆள்வினை உடைமை

9. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
   இன்மை புகுத்தி விடும்.

முயற்சி செல்வத்தை மேலும் மேலும் பெருக்கும்; முயற்சி இல்லாமை வறுமை அடையச் செய்யும்.

(திரு – செல்வம். இன்மை – வறுமை)

### சான்றாண்மை

10. இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
    என்ன பயத்ததோ சால்பு.

தமக்குத் தீங்கு செய்தவர்களுக்கும் நன்மையே செய்க. அவ்வாறு செய்யாவிட்டால் சான்றாண்மை என்னும் நல்ல குணம் இருந்தும் பயனில்லை.

(இன்னா – துன்பம். சால்பு – குணப் பெருமை)

– திருவள்ளுவர்.



திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்ற மூன்று பிரிவுகளை உடையது. 133 அதிகாரங்களைக் கொண்டது. 1330 குறட்பாக்களை உடையது. உலக மக்கள் அனைவருக்கும் பொதுவான அறநெறிகளை இது எடுத்துக் கூறுகிறது. இந்நூல் 'உலகப் பொதுமறை' என அழைக்கப் பெறுகிறது. இதனை இயற்றியவர் திருவள்ளுவர்.

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

### 1. பிரித்து எழுதுக.

நன்றல்லது ____________________

வித்தாகும் ____________________

தீயொழுக்கம் ____________________

சினங்காக்க ____________________

உள்ளத்தனைய ____________________

### 2. சேர்த்தெழுதுக.

நன்று + அன்று ____________________

நன்மை + ஒழுக்கம் ____________________

பயன் + உடைய ____________________

தன்னை + தான் ____________________

எண்ணி + துணிக ____________________

### 3. விடையளிக்க.

1. நன்று, நன்றன்று எவை ?
2. எது எப்பொழுதும் துன்பம் தரும் ?
3. தன்னெஞ்சே தன்னைச் சுடும். ஏன் ?
4. எங்கே சினத்தைக் காக்க வேண்டும் ?

### 4. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை தருக.

1. திருக்குறள் – சிறுகுறிப்பு வரைக.
2. செய்ந்நன்றி அறிதல், ஒழுக்கம் உடைமை – இவை குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகள் யாவை ?
3. வாய்மை குறித்தும், வெகுளாமை குறித்தும் வள்ளுவர் கூறுவன யாவை ?
4. தெரிந்து செயல்வகை, சான்றாண்மை குறித்து எழுதுக.

### 5. முதல் எழுத்தை மாற்றி வேறு வேறு சொல்லாக்குக.

சுடும் – படும் __________ __________ __________

கொல்லும் – வெல்லும் __________ __________ __________

மறப்பது – பறப்பது __________ __________ __________

### 6. கோடிட்ட இடத்தை நிரப்புக.

எண்ணித் துணிக. ____________________

தன்னெஞ் சறிவது. ____________________

தமிழர்களின் அறநூல் . ____________________

திருக்குறளை இயற்றியவர். ____________________

**செயல் திட்டம்**

திருக்குறளில் உள்ள வேறு பத்துக் குறட்பாக்களை அதன் பொருளுடன் எழுதி வருக.

## (ஆ) மூதுரை

1. நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே – அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்
நீர்மேல் எழுத்திற்கு நேர்.

நல்லவர்களுக்குச் செய்த உதவி கல்மேல் எழுதிய எழுத்துப்போல் அழியாது; நல்லவர் மனதில் நிலைத்து நிற்கும். ஆனால், இரக்கம் சிறிதும் இல்லாதவர்களுக்குச் செய்த உதவி, நீர்மேல் எழுதும் எழுத்துப்போல அவர் மனதில் நில்லாது; அக்கணமே அழிந்துவிடும்; நன்றி மறப்பர்.

(உபகாரம் = உதவி. ஈரம் = இரக்கம். ஈந்த = கொடுத்த. நேர் = ஒப்பு)

2. அடக்கம் உடையார் அறிவிலரென்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா – மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு.

மடைத்தலையில் தனக்குத் தேவையான பெரிய மீன் வரும்வரை கொக்கு அமைதியாகக் காத்திருக்கும். அதுபோல, அறிவில் சிறந்த சான்றோர் தமக்கு ஏற்ற காலம் வரும்வரை அடக்கமாக இருப்பார்கள். அவ்வடக்கத்தை அறியாமை என்று தவறாகக் கருத வேண்டா.

(மடைத்தலை = குளத்துநீர் வெளியேறும் வழி (மடைமுகம்)
உறுமீன் = பெரியமீன். வாடியிருத்தல் = காத்துக் கொண்டு இருத்தல்)

3. அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் – அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு.

நீர்வற்றிய குளத்தைவிட்டு நீர்ப்பறவைகள் வேறு குளத்தை நாடிச் செல்லும். அப்பறவைகளைப் போல, ஒருவர் வறுமையுற்ற காலத்தில் அவரைவிட்டு நீங்குபவர் உறவினர் அல்லர். நீர் வற்றிய காலத்தில் குளத்தைவிட்டு நீங்காமல் ஒட்டிக் கிடக்கும் கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போல, வறுமையுற்ற காலத்தில் நீங்காமல் ஒட்டி வாழ்பவரே உறவினர் ஆவர்.

(அற்றகுளம் = நீர்வற்றிய குளம். அறு = நீங்கும்.
உற்றுழி = உரிய காலத்தில். தீர்வார் = நீங்குபவர்.)

– ஔவையார்.

முதுமை + உரை = மூதுரை. மூதுரை என்பதற்குச் சான்றோர்தம் அறிவுரை என்பது பொருள். இது மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத நல்ல கருத்துகளை எடுத்துரைக்கிறது.



இதனை இயற்றியவர் ஔவையார். இவர் பிற்காலத்தவர். ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி முதலிய நூல்களையும் இவர் இயற்றியுள்ளார்.

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

### 1. பிரித்து எழுதுக.

ஈரமிலா ______________________

அறிவிலரென்று ______________________

மடைத்தலை ______________________

உற்றுழி ______________________

அக்குளத்தில் ______________________

### 2. விடையளிக்க.

1. யாருக்குச் செய்த உதவி கல்மேல் எழுத்துப்போல் நிலைத்து நிற்கும் ?
2. ஈரமில்லாத நெஞ்சத்தார்க்குச் செய்த உதவி எத்தன்மை உடையது ?
3. கொக்கு ஏன் வாடி இருக்கும் ?
4. துன்பம் வந்த காலத்து நம்மை விட்டு நீங்குபவர் எவற்றைப் போன்றவர் ?
5. உண்மையான உறவு என்பது எவற்றைப் போல ஒட்டி வாழவேண்டும் ?

### 3. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடைதருக.

1. நல்லார், அல்லார் ஆகியோருக்குச் செய்த உதவி பற்றி மூதுரை கூறுவன யாவை ?
2. "மடைத்தலையில் வாடி இருக்குமாம் கொக்கு" – உவமை கூறும் விளக்கம் யாது ?
3. உறவு, உறவு அல்லர் பற்றி ஔவையார் கூறுவன யாவை ?

### 4. புலவர்களையும் அவர்கள் எழுதிய நூல்களையும் பொருத்துக.

| | | |
|---|---|---|
| ஔவையார் | – | திருக்குறள் |
| பாரதிதாசன் | – | நறுந்தொகை |
| திருவள்ளுவர் | – | மூதுரை |
| அதிவீரராமபாண்டியன் | – | பாண்டியன் பரிசு |

## (இ) நறுந்தொகை

1. கல்விக்கு அழகு கசடற மொழிதல்.

கல்வி கற்றதன் பெருமை, குற்றம் இன்றித் தெளிவாகப் பேசுதலே ஆகும்.

(கசடற = குற்றமின்றி. மொழிதல் = சொல்லுதல்)

2. உண்டிக்கு அழகு விருந்தோடு உண்டல்.

விருந்தினரோடு உண்பதுதான், விருந்துக்குச் சிறப்பு ஆகும்.

(உண்டி = உணவு. உண்டல் = சாப்பிடுதல்)

3. அறிஞர்க்கு அழகு கற்றுணர்ந்து அடங்கல்.

கல்வியைக் கற்று, உணர்ந்து, அடக்கத்தோடு வாழ்வதே அறிஞர் பெருமக்களுக்கு அழகாகும். (அடங்கல் = அடக்கமாக இருத்தல்)

4. உற்றோர் எல்லாம் உறவினர் அல்லர்.

உறவுமுறை சொல்பவர்கள் எல்லாம் உறவினர்கள் ஆகமாட்டார்கள். நம் இன்ப துன்பங்களில் பங்குகொண்டு உடனிருந்து உதவுபவர்களே உறவினர் ஆவார்.

(உற்றோர் = உறுதுணையானவர்)

5. கலக்கினும் தண்கடல் சேறாகாதே.

கடலை எவ்வளவு கலக்கினாலும் அதன் நீர் தெளிவாக இருக்கும் ; சேறு ஆகாது. அதுபோல, பெரியோரை எவ்வளவு இகழ்ந்தாலும் அவர்களின் புகழ் குன்றாது.

(தண்கடல் = குளிர்ச்சியான கடல். சேறு = சகதி)

6. பெருமையும் சிறுமையும் தான்தர வருமே.

ஒருவர்க்குக் கிடைக்கும் பெருமையும் சிறுமையும் அவர்களின் செயல்களாலேயே உண்டாகின்றன. (பெருமை = மதிப்பு.சிறுமை = இழிவு)

7. அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்.

கல்வி அறிவுடைய ஒருவரை, அரசும் விரும்பி மதிப்பு அளிக்கும்.

(அறிவுடைய = கல்வி அறிவினை உடைய)

8. உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா.

செல்வச் செழிப்பும் வறுமையும் ஒரே இடத்தில் நிலையாகத் தங்குவது இல்லை. (உடைமை = செல்வம். வறுமை = ஏழ்மை)

9. துணையோடு அல்லது நெடுவழி போகேல்.

வழித்துணை இல்லாமல் நெடுந்தொலைவுப் பயணம் போகாதீர்.)

(நெடுவழி = நீண்ட தொலைவு. போகேல் = போகாதீர்.)

**10. வழியே ஏகுக வழியே மீளுக.**

உரிய வழியில் செல்க; உரிய வழியே திரும்புக.

(ஏகுக = செல்க. மீளுக = திரும்புக)

– அதிவீரராம பாண்டியன்.

நறுந்தொகை நூலுக்கு 'வெற்றிவேற்கை' என்ற வேறு பெயரும் உண்டு. இந்நூலில் எண்பத்திரண்டு அறமொழிகள் இடம்பெற்றுள்ளன. இவை நம் வாழ்க்கையை நெறிப்படுத்த வல்லன. இந்நூலின் ஆசிரியர் அதிவீரராம பாண்டியன் என்னும் மன்னராவார். இவர் தென்காசியைத் தலை நகராகக் கொண்டு ஆண்டு வந்தார்.

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

### 1. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. கல்விக்கு அழகு ______________ மொழிதல்.
2. உண்டிக்கு அழகு ______________ உண்டல்.
3. தக்க துணையின்றி ______________ போகக் கூடாது.
4. நறுந்தொகை நூலை இயற்றியவர் ______________.

### 2. 'பா' அடிகளைப் பொருத்துக.

| | | |
|---|---|---|
| உற்றார் எல்லாம் | – | கற்றுணர்ந்து அடங்கல் |
| கலக்கினும் தண்கடல் | – | ஒருவழி நில்லா |
| அறிஞர்க்கு அழகு | – | தான் தர வருமே |
| பெருமையும் சிறுமையும் | – | உறவினர் அல்லர் |
| உடைமையும் வறுமையும் | – | சேறாகாதே |

### 3. விடையளிக்க.

1. அறிஞர்க்கு அழகு யாது ?
2. அரசன் யாரை விரும்புவான் ?
3. யாரெல்லாம் உறவினர் அல்லர் ?
4. கலக்கினும் தண்கடல் சேறாகாது– விளக்குக ?
5. பெருமையும் சிறுமையும் ஒருவற்கு எதனால் வரும் ?

### 4. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை தருக.

நறுந்தொகை கூறும் அறிவுரைகளில் எவையேனும் ஆறு எழுதுக.

**செயல் திட்டம்**

நீங்களும் கவிஞர் ஆகலாம்!

நறுந்தொகையில் உள்ள பாடல்களைப் போன்று எவையேனும் நான்கு ஒருவரிப்பாடல் எழுதுக.

(எ.கா) படித்தவர்க்கு அழகு பண்புடன் பழகுதல்.

## (ஈ) சின்னராசா கண்ணுறங்கு !



ஆராரோ ஆரிரரோ ஆராரோ ஆரிரரோ
ஆராரோ ஆரிரரோ ஆராரோ ஆரிரரோ

தினை வெரைக்கும் கொல்லையிலே – கண்ணே
        தேரோடிப் போகுதப்பா
மலைப் பிஞ்சிக் கொல்லையிலே – கண்ணே
        மானோடிப் போகுதப்பா

(ஆராரோ ஆரிரரோ)

பட்டு விரித்த மெத்தையிலே – கண்ணே
        படுத்துமே நீயுறங்கு
சிட்டுக்குருவி பாடிவரக் – கண்ணே
        சின்னராசா நீயுறங்கு

(ஆராரோ ஆரிரரோ)

பச்சைக்கிளி பக்கத்திலே – கண்ணே
        பாலுஞ்சோறுங் கிண்ணத்திலே
பாலும் பலவகையாம் – கண்ணே
        பாலகனே உண்டுறங்கு.

(ஆராரோ ஆரிரரோ)

– நாட்டுப்புறப் பாடல்.

தாலாட்டு – குழந்தையை உறங்கவைப்பதற்கு மென்மையான ஓசையுடன் இனிய குரலால் பாடும் பாடல் தாலாட்டாகும். தாலாட்டுப் பாடலில் நாட்டுப்புற மக்களின் அன்பு, வீரம், வாழ்க்கை முறை ஆகியவற்றை அறிந்து கொள்ளலாம். குழந்தையைத் தாலாட்டும் மரபு தொன்றுதொட்டு இருந்து வருகிறது. இது வாய்மொழி இலக்கியம் ஆகும்.

பொருள் அறிக:

மலைப் பிஞ்சி – குறுமணல் (வேலூர் மாவட்ட வழக்கு) தினை – மலைப் பயிர்.
கொல்லை – புன்செய் நிலம்.உறங்கு – தூங்கு. பாலகன் – ஆண்குழந்தை.

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

**1. பிரித்து எழுதுக.**

தேரோடி ______________

நீயுறங்கு ______________

மானோடி ______________

**2. விடையளிக்க.**

1. தேர் – எதன் வழியாகப் போகிறது ?
2. மான் ஓடும் கொல்லை – எது ?
3. குழந்தை எந்த மெத்தை மேல் உறங்கவேண்டும் எனத் தாய் கூறுகிறாள் ?
4. தாய் பாடிய தாலாட்டுப் பாடலின் கருத்தை எழுதுக.

**3. பேச்சு வழக்குச் சொல்லை எழுத்து வழக்குச் சொல்லாக மாற்றுக.**

வெரைக்கும் ______________

போகுது ______________

ராசா ______________

போகுதப்பா ______________

**4. உனக்குப் பிடித்த பறவைகளின் பெயர்களை வருணனைச் சொல்லுடன் இணைத்து எழுதுக.**

(எ.கா.)

வெள்ளைக் கொக்கு.

______________, ______________, ______________.

### செயல் திட்டம்

நாட்டுப்புறப் பாடல்களைச் சேகரித்து எழுதி வருக. அதில் வரும் பேச்சு வழக்குச் சொற்களைத் திருந்திய எழுத்து வழக்குச் சொற்களாக மாற்றி அகர வரிசைப் படுத்தி எழுதி வருக.

# அகர முதலி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அகவை | – | வயது | தானம் | – | கொடை |
| அகிலம் | – | உலகம் | திண்ணியர் | – | வலியவர் |
| அங்காடி | – | கடை | திண்மை | – | உறுதி |
| அஞ்சி | – | பயந்து | தொன்மை | – | பழமை |
| அந்தி | – | மாலைப் பொழுது | நன்செய் | – | நீர்வளம் நிறைந்த நிலம் |
| அமிழ்தம் | – | சாவா மருந்து | நாணம் | – | வெட்கம் |
| அல் | – | இரவு | நெய்தல் | – | கடலோர நிலப்பகுதி |
| அறிஞர் | – | அறிவில் சிறந்தவர் | நோன்பு | – | பொறுத்தல் |
| அனல் | – | வெப்பம் | பாரம் | – | சுமை |
| ஆணை | – | கட்டளை | பாலைவனம் | – | மணற்பகுதி |
| ஆழி | – | கடல் | புதையல் | – | புதைத்த பொருள் |
| இகழ்தல் | – | பழித்தல் | புரவி | – | குதிரை |
| இடர் | – | துன்பம் | புனல் | – | தண்ணீர் |
| ஈகம் | – | கொடை | புன்செய் | – | வானம் பார்த்த பூமி |
| ஊதியம் | – | வருவாய் | புன்முறுவல் | – | குறுநகை |
| எய்துவர் | – | அடைவர் | பூரித்து | – | மகிழ்ந்து |
| ஏளனம் | – | இகழ்ச்சி | பெரும்பேறு | – | பெருஞ்செல்வம் |
| ஏற்றம் | – | மேன்மை | பொருள் | – | செல்வம் |
| ஓடை | – | நீரோட்டம் | பொலிவு | – | அழகு |
| கண்டம் | – | நிலத்தின் பிரிவு | பொறி | – | கருவி |
| கதிரவன் | – | சூரியன் | மடல் | – | கடிதம் |
| கருவாடு | – | உலர்ந்த மீன் | மரபு | – | வழக்கு |
| கார்காலம் | – | மழைக்காலம் | மருதம் | – | வயல் பகுதி |
| குப்பம் | – | மீனவர் வாழிடம் | மறுசுழற்சி | – | மீள் உருவாக்கம் |
| குறிஞ்சி | – | மலைப்பகுதி | மன்னவர் | – | அரசர் |
| கேடு | – | கெடுதல் | மாண்பு | – | சிறப்பு, பெருமை |
| சமவெளி | – | சமமான நிலப்பகுதி | முகமை | – | நிறுவனம் |
| சிற்பம் | – | கற்சிலை | முல்லை | – | காட்டு பகுதி |
| சின்னம் | – | அடையாளக் குறி | மெய் | – | உண்மை |
| சுரங்கம் | – | கனிமச் சுரங்கம் | மேதை | – | அறிஞர் |
| சுள்ளி | – | காய்ந்த சிறு விறகு | மொட்டு | – | அரும்பு |
| சூளை | – | மண்பாண்டம் வேக வைக்குமிடம் | வருணனை | – | விவரிப்பு |
| | | | வாடை | – | வடதிசைக் காற்று |
| சூறாவளி | – | சுழல்காற்று | விண் | – | வானம் |
| செம்மை | – | திருத்தம் | விளித்து | – | அழைத்து |
| செவி | – | காது | வெள்ளம் | – | நீர் |
| சொப்பனம் | – | கனவு | வெற்பு | – | மலை |
| சோம்பேறி | – | சோம்பி இருப்பவன் | வேளாண்மை | – | உழவு |
| தட்டம் | – | தட்டு | வைரம் | – | நவ மணிகளுள் ஒன்று |
| தலையாயது | – | முதன்மையானது | | | |

| பாட எண். | பாடம் | திறன் | திறன் விளக்கம் |
|---|---|---|---|
| 1. | மெய் சொல்லல் (பாடல்) | 1.1 | ஓசை நயமிக்க கருத்துப் பாடல்களைக் கேட்டுப் புரிந்து கொள்ளல். |
| 2. | இயற்கை (படம்) | 5:1 | படம் பார்த்து வருணித்து எழுதுதல். |
| 3. | கொடிக்குக் காய் பாரமா ?<br>(தெரிந்து கொள்வோம்) | 1:2<br>6:1 | நாட்டுப்புறக் கதைகளைக் கேட்டுப் புரிந்து கொள்ளல்.<br>திணை வேறுபாடுகளை அறிதல் |
| 4. | வழங்கும் தமிழ் | 1:3 | சூழ்நிலையில் உற்றுக் கேட்ட விவரங்களைப் புரிந்து கொள்ளுதல் |
| 5. | மடல் எழுதுவோம் | 4:4 | விடுப்புக் கடிதம் எழுதுதல். |
| 6. | ஒரு கார்காலப் பொழுது | 2:3 | வருணனை கலந்து பேசுதல். |
| 7. | தமிழன் இதயம் (பாடல்) | 1:1 | ஓசை நயமிக்க கருத்துப் பாடல்களைக் கேட்டுப் புரிந்து கொள்ளல் |
| 8. | பொம்மை உலகம் | 4:2 | பத்தியிலிருந்து வினாக்களுக்கு விடை எழுதுதல் |
| 9. | ஒளிமயமான எதிர்காலம் | 2:2 | விவாதங்களில் பங்கேற்றல் |
| 10. | அறிவு வந்தது | 3:4 | பழமொழிகளைப் படித்தல் |
| 11. | மரபு அறிவோம் | 7:1<br>8:2 | மரபுச் சொற்களை அறிதல்<br>மரபுச் சொற்களைப் பயன்படுத்துதல் |
| 12. | வருது . . . வருது . . . ரோபோ வருது ! | 3:3 | கையெழுத்துக் கடிதங்களைப் படித்தல் |
| 13. | இறகும் இலையும் ஒன்றடி<br>(தெரிந்து கொள்வோம் ) | 4:3<br>6:2 | புதிர்களை எழுதுதல்<br>காலங்கள் அறிதல் |
| 14. | நீண்ட வழி போக வேண்டுமம்மா !<br>(பாடல்) | 4:5 | கட்டுரை / பாடல் எழுதுதல் |
| 15. | படித்தால் தெரியும் | 3:2 | சுவரொட்டி, அறிவிப்புகளைப் படித்தல். |
| 16. | மேகமும் மணற்குன்றும் | 3:1 | கதைகளை நிறுத்தற் குறிகளுக்கு ஏற்பப் படித்தல் (தன்வரலாறு) |
| 17. | அணையா விளக்கு | 2:1 | தங்கு தடையின்றிப் பேசுதல் |
| 18. | செம்மொழி – பண்பாட்டு மொழி | 7:2 | கட்டுரை எழுதுதல் |
| 19. | படமும் பாடமும் (பட அகராதி) | 4:5 | அகர முதலியைப் பயன்படுத்திப் பொருள் அறிதல். |
| 20. | செய்யுட் பகுதி<br>(அ) திருக்குறள் (ஆ)மூதுரை<br>(இ)நறுந்தொகை(ஈ) தாலாட்டு | 7:2<br>8:1 | செய்யுள் இன்பம் அறிதல்,<br>பண்புசார் கல்வி வளர்ச்சி. |
| 21. | அகர முதலி | 8:3 | அகர முதலியைப் பயன்படுத்திப் பொருள்அறிதல்,<br>சொற்களஞ்சியம் பெருக்குதல். |
|  | பாடப்பயிற்சிகள் | 4.1<br>5.3 | சொல்லக்கேட்டுப் பிழையின்றி எழுதுதல்,<br>படத்தொகுப்பு உருவாக்குதல் |